www.surabooks.com

சுராவின்

கணக்குப்பதிவியல்

மேல்நிலை - முதலாம் ஆண்டு

சிறப்பம்சங்கள் :

- புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.
- அனைத்துப் பாடப்பகுதிகளிலும் மிகுதியான அளவில் கூடுதல் வினாக்கள் விடைகளுடன் தரப்பட்டுள்ளன.
- கொள்குறி (Objective) வகையிலான 1 மதிப்பெண் வினாக்கள் கீழ்கண்ட தலைப்புகளில் தரப்பட்டுள்ளன
  1. சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல்
  2. பொருத்துதல்
  3. கோடிட்ட இடத்தை நிரப்புதல்
  4. பொருந்தாததை கண்டறிதல்
  5. கூற்று மற்றும் காரணம்
  6. சரியான கூற்றைக் கண்டறிதல்
- அரசு மாதிரி வினாத்தாள் - 2018 [Govt. MQP-2018], முதல் பருவ இடைத்தேர்வு [First Mid-2018], காலாண்டுத் தேர்வு- 2018, 19, 2023 [QY. 2018,19, 2023], அரையாண்டுத் தேர்வு - 2018, 19, 2023 [HY. 2018, 19, 2023], அரசு பொதுத்தேர்வு மார்ச் 2019, மே 2022, மார்ச் –2023 & 2024 [Mar.- 2019, May -2022, Mar.- '23, &'24], உடனடி தேர்வு ஜுன் - 2019, ஆகஸ்ட் - 2022 & ஜுலை 2023 [June - 2019, Aug.- 2022 & July-'23], அரசு துணைத்தேர்வு செப்டம்பர் - 2020 & 2021 [Sep. - 2020 & 2021] பொதுத்தேர்வுக்கான முக்கிய வினாக்கள் [BEQ] மற்றும் பொது திருப்புதல் தேர்வு 2022 [தி.தே - 2022] வினாக்கள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- அரசு பொதுத்தேர்வு – மார்ச் 2024 வினாத்தாள் விடைகளுடன் சேர்க்கப்பட்டுள்ளது.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

For Orders Contact
80562 94222 / 81242 01000 / 81243 01000
96001 75757 / 78718 02000 / 98409 26027
enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com

© வெளியீட்டாளர்கள்

குறியீட்டு எண் : SG 276

எழுதி வழங்கியவர்
திருமதி. கிறிஸ்டினா ஏஞ்சல், M.Com., M.Phil.

Also available for Std. - XI

Guides :

- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's Smart English
- Sura's Mathematics (EM/TM)
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Bio-Botany & Botany (EM/TM) (Short version & Long Version)
- Sura's Bio-Zoology & Zoology (EM/TM) (Short version & Long Version)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Computer Applications (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Mathematics (EM)

10/06/2024

தலைமை அலுவலகம்:

சுரா பப்ளிகேஷன்ஸ்
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை-600 040.
☎ 91-44-4862 9977, 4862 7755
E-mail : enquiry@surabooks.com
Website : www.surabooks.com

For Orders Contact
80562 94222
81242 01000
81243 01000
96001 75757
78718 02000
98409 26027

enquiry@surabooks.com   PH: 8124201000 / 8124301000

www.surabooks.com

பதிப்பாசிரியர் உரை

11ம் வகுப்பிற்கான சுராவின் **கணக்குப்பதிவியல்** வழிகாட்டியை வெளியிடுவதில் பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகிறோம். கணக்குப்பதிவியல் பாடங்களுக்கான வினா விடைகள் / பயிற்சி கணக்குகள் மிகவும் எளிமையாக, சுலபமாக புரிந்துகொள்ளும் விதத்தில் தரப்பட்டுள்ளன.

சுராவின் கணக்குப்பதிவியல் வழிகாட்டி மாணவர்களின் எல்லாத் தேவைகளையும் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. பாடநூலை நன்கு மதிப்பாய்வு செய்து மாணவர்கள் எல்லாப் பாடங்களையும் வெகுவாக உட்கிரகித்து அறிந்துகொண்டு தேர்வை சுலபமாக எழுதி அதிக மதிப்பெண்களைப் பெற்று வெற்றியாளர்களாகும் விதத்தில், நமது வெற்றிக்கான இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கு பாடம் நடத்துவதிலும், மாணவர்களுக்குக் கற்றுக்கொள்வதிலும் இந்த வழிகாட்டி துணையாக இருக்கும்.

நமது சுராவின் கணக்குப்பதிவியல் வழிகாட்டியில் இது போன்ற பல சிறப்பம்சங்கள் அடங்கியிருந்தாலும், கணக்குப்பதிவியல் மாணவர்கள் புரிந்துகொள்ள உதவிடும் ஆசிரியர்களின் பணியும் மகத்தானது என்பதை மறுப்பதற்கில்லை.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

இறையருளை வேண்டுகிறோம்.

நலமே விளைக!

சுபாஷ் ராஜ், B.E., M.S.,
- பதிப்பகத்தார்.

வாழ்த்துக்கள் !!!

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

TO ORDER WITH US

SCHOOLS and TEACHERS:

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'**
Kindly prepare your order in your School letterhead and send it to us.
For Orders contact: 81242 01000 / 81243 01000

DIRECT DEPOSIT

A/c Name	:	**Sura Publications**
Our A/c No.	:	**36550290536**
Bank Name	:	**STATE BANK OF INDIA**
Bank Branch	:	Padi
IFSC	:	SBIN0005083

A/c Name	:	**Sura Publications**
Our A/c No.	:	**21000210001240**
Bank Name	:	**UCO BANK**
Bank Branch	:	Anna Nagar West
IFSC	:	UCBA0002100

A/c Name	:	**Sura Publications**
Our A/c No.	:	**6502699356**
Bank Name	:	**INDIAN BANK**
Bank Branch	:	Asiad Colony
IFSC	:	IDIB000A098

A/c Name	:	**Sura Publications**
Our A/c No.	:	**1154135000017684**
Bank Name	:	**KVB BANK**
Bank Branch	:	Anna Nagar
IFSC	:	KVBL0001154

A/c Name	:	**Sura Publications**
Our A/c No.	:	**13240200032412**
Bank Name	:	**FEDERAL BANK**
Bank Branch	:	Anna Nagar
IFSC	:	FDRL0001324

A/c Name	:	**Sura Publications**
Our A/c No.	:	**50200031530945**
Bank Name	:	**HDFC BANK**
Bank Branch	:	Cenotaph Road, Teynampet
IFSC	:	HDFC0001216

After Deposit, please send challan and order to our address.
email to : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.

G Pay **For Google Pay :** **98409 26027**

For PhonePe : **98409 26027**

DEMAND DRAFT / CHEQUE

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**. The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

STUDENTS :

Order via Money Order (M/O) to

SURA PUBLICATIONS
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar, Chennai - 600 040.
Phone : 044-4862 9977, 044-4862 7755.
Mobile : 96001 75757 / 81242 01000 / 81243 01000.
Email : orders@surabooks.com Website : www.surabooks.com

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com

பொருளடக்கம்

அலகு	பாடத் தலைப்புகள்	பக்க எண்	மாதம்
1.	கணக்கியல் அறிமுகம்	1-8	ஜூன்
2.	கணக்கியலின் கருத்துக் கட்டமைப்பு	9-15	
3.	முதன்மைப் பதிவேடுகள்	16-48	
4.	பேரேடு	49-78	ஜூலை
5.	இருப்பாய்வு	79-90	
	முதல் பருவத் தேர்வு (ஜூன், ஜூலை)		
6.	துணை ஏடுகள் - I	91-120	ஆகஸ்ட்
7.	துணை ஏடுகள் - II	121-148	
8.	வங்கிச் சரிகட்டும் பட்டியல்	149-163	செப்டம்பர்
	காலாண்டுத் தேர்வு (ஜூன் - செப்டம்பர்)		
9.	பிழைத் திருத்தம்	164-176	அக்டோபர்
10.	தேய்மானக் கணக்கியல்	177-194	
11.	முதலின மற்றும் வருவாயின நடவடிக்கைகள்	195-203	நவம்பர்
12.	தனியாள் வணிகரின் இறுதிக்கணக்குகள் - I	204-218	
	இரண்டாம் பருவத் தேர்வு (அக்டோபர், நவம்பர்)		
13.	தனியாள் வணிகரின் இறுதிக்கணக்குகள் - II	219-244	டிசம்பர்
14.	கணினிமயக் கணக்கியல்	245-250	
	அரையாண்டுத் தேர்வு (மொத்த அலகுகள்)		

	அரசு பொதுத்தேர்வு - மார்ச் 2024 வினாத்தாள் விடைகளுடன்	251-266	

www.surabooks.com


SURA'S
2024-25
EDITION
SCHOOL GUIDES
For Class
11th Std
100 Marks Pattern
English & Tamil Medium
SG145
SG137
SG215
SG261
SG263
SG265
SG267
SG269
SG276
SG213
SG214
SG273
SG271
SURA PUBLICATIONS
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar,
Chennai - 600 040. INDIA. Phones: 044-48629977, 48627755
Mobile: 81242 01000 / 81243 01000
email : enquiry@surabooks.com
orders@surabooks.com
Buy online @
surabooks.com

அலகு 1

கணக்கியல் அறிமுகம்

பொருளடக்கம்

1.1 கணக்கியலின் அறிமுகம்
1.2 கணக்கியலின் பரிணாம வளர்ச்சி
1.3 கணக்கியலின் பொருள் மற்றும் வரைவிலக்கணம்
1.4 கணக்கியல் சுழல்
1.5 கணக்கியலின் நோக்கங்கள்
1.6 கணக்கியலின் பணிகள்
1.7 கணக்கியலின் முக்கியத்துவம்
1.8 அடிப்படை கணக்கியல் கலைச்சொற்கள்
1.9 கணக்கியல் பிரிவுகள்
1.10 கணக்கியல் அடிப்படைகள்
1.11 கணக்கியல் தகவல்களின் பயனீட்டாளர்கள்
1.12 கணக்காளரின் பங்களிப்பு

www.surabooks.com

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com

புத்தக வினாக்கள் மற்றும் விடைகள்

சுய ஆய்வு வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும் :

1. நிதிநிலைக் கணக்கின் அடிப்படையாக விளங்குவது
[BEQ; HY. - 2018 & 2019; Mar.- 2019; Sep. - 2021; Aug. - 2022]

(அ) சமூகக் கணக்கியல் [July-'23]
(ஆ) காரியதரிசிகளின் கணக்கியல்
(இ) மேலாண்மைக் கணக்கியல்
(ஈ) பொறுப்பு கணக்கியல்

[விடை. (ஆ) காரியதரிசிகளின் கணக்கியல்]

2. பின்வருவனவற்றுள் எது கணக்கியலின் முதன்மை நோக்கம் ஆகாது. [Sep. - 2020;May - 2022]

(அ) நடவடிக்கைகளை முறையாகப் பதிவு செய்தல்.
(ஆ) வணிகத்தின் இலாபம் ஈட்டும் திறனை அறிந்து கொள்ளுதல்.
(இ) நிறுவனத்தின் நிதிநிலையை அறிந்து கொள்ளுதல்.
(ஈ) வரிவிதிக்கும் அதிகாரிகளிடம் வரித்தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல்.

[விடை. (ஈ) வரிவிதிக்கும் அதிகாரிகளிடம் வரித்தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல்.]

3. பின்வருவனவற்றில் எது கணக்கியலின் பிரிவுகளில் இடம் பெறாது? [BEQ; Govt. MQP-2018; CRT - 2022]

(அ) நிதிநிலைக் கணக்கியல்
(ஆ) மேலாண்மைக் கணக்கியல்
(இ) மனிதவளக் கணக்கியல்
(ஈ) மேற்கண்ட ஏதுமில்லை

[விடை. (ஈ) மேற்கண்ட ஏதுமில்லை]

4. ஒரு வணிகத்தின் நிதிநிலையை அறிந்துகொள்ள அடிப்படையானது. [First Mid-'18; QY.-'18; June-'19; Mar-'23]

(அ) குறிப்பேடு (ஆ) இருப்பாய்வு [HY.-'23]
(இ) இருப்பு நிலைக் குறிப்பு (ஈ) பேரேடு

[விடை. (இ) இருப்பு நிலைக் குறிப்பு]

5. நிதித்தகவல்களின் அகப்பயனாளராகக் கருதப்படுவர் யார்? [BEQ; HY.-2018; QY. & June-'19; CRT-2022; July & QY-'23; Mar-'24]

(அ) கடனீந்தோர் (ஆ) பணியாளர்
(இ) வாடிக்கையாளர் (ஈ) அரசு

[விடை. (ஆ) பணியாளர்]

II. மிகக் குறுகிய வினாக்கள் :

1. கணக்கியலை வரையறு. [QY.-'23]
[BEQ; QY. - 2018; Sep. - 2020;CRT & May - 2022; Mar-'24]

விடை. அமெரிக்க கணக்கியல் கழகத்தின் கூற்றின்படி, "கணக்கியல் என்பது பொருளாதார தகவல்களைக் கண்டறிந்து, அளவிட்டு, தகவல் தெரிவிக்கக்கூடிய ஒரு செயல்பாடாகும். இதன் மூலம், தகவல்களைப் பயன்படுத்துவோர் தக்க தீர்வு காண்பதற்கும் மற்றும் முடிவெடுப்பதற்கும் வகை செய்கிறது."

2. கணக்கியலின் ஏதேனும் இரண்டு பணிகளைக் கூறுக.
[BEQ; Govt. MQP - 2018; Mar. - 2019; Sep. - 2021; Aug. - 2022]

விடை. (i) **முன்னறிதல் :**
வணிக நிறுவனங்களின் எதிர்கால செயல் திறன் மற்றும் நிதிநிலைப் பற்றி கணக்கியலின் பல்வேறு கருவிகளின் மூலம் முன்கூட்டியே அறிந்து கொள்ள முடிகிறது.

(ii) **முடிவெடுத்தல் :**
திட்டமிடுதல், செயல்திறன் மதிப்பீடு, கட்டுப்பாடு ஆகிய மேலாண்மை பணிகளுக்கான தகவல்களை நிர்வாகத்திற்கு கணக்கியல் வழங்குகிறது.

3. கணக்கியல் செயல்பாட்டிலுள்ள படிநிலைகள் யாவை? [HY. - 2019]

விடை. கணக்கியல் சுழலின் படிநிலைகள் பின்வருமாறு,

(i) நடவடிக்கைகளை இனம் கண்டு குறிப்பேட்டில் பதிவு செய்தல்.
(ii) எடுத்தெழுதுதல் மற்றும் இருப்புக்கட்டுதல்.
(iii) இருப்பாய்வு தயாரித்தல்.
(iv) வியாபாரக்கணக்கு தயாரித்தல்.
(v) இலாபநட்டக் கணக்கு தயாரித்தல்.
(vi) இருப்பு நிலைக்குறிப்பு தயாரித்தல்.

4. கணக்கியல் தகவல்களில் ஆர்வமுடைய நபர்கள் யாவர்? [QY. - 2019; HY. - 2019; Mar-'23]

விடை. பல்வேறு நோக்கங்களுக்காக, கணக்கியல் தகவல்கள் பல்வேறு நபர்களுக்கு தேவைப்படும். அப்பயனீட்டாளர்களை இரண்டு பிரிவுகளில் வகைப்படுத்தலாம்.

(அ) அகப்பயனீட்டாளர்கள்
(i) உரிமையாளர்கள்
(ii) நிர்வாகம்
(iii) பணியாளர்கள்

(ஆ) புறப் பயனீட்டாளர்கள்
(i) கடனீந்தோர் மற்றும் நிதி நிறுவனங்கள்.
(ii) முதலீட்டாளர்கள்
(iii) வாடிக்கையாளர்கள்
(iv) வரி அதிகாரிகள் மற்றும் ஒழுங்குமுறை அமைப்புகள்.
(v) அரசு.
(vi) ஆராய்ச்சியாளர்கள்.
(vii) பொதுமக்கள்.

5. கணக்கியல் தகவல்களை பதிவு செய்யும் எவையேனும் இரண்டு அடிப்படைகளின் பெயர்களைத் தருக.

விடை. (i) ரொக்க அடிப்படை. [BEQ; HY. - 2018; CRT - 2022]
(ii) நிகழ்வு அடிப்படை அல்லது வணிக அடிப்படை.
(iii) கலப்பு அல்லது கலப்பின அடிப்படை

III. குறுகிய வினாக்கள் :

1. கணக்கியலின் பொருளை விளக்குக.

விடை. (1) கணக்கியல் என்பது நிதியியல் தகவல்களை, இனம்காணுதல், அளவிடுதல், பதிவுசெய்தல் வகைப்படுத்துதல், சுருக்கமுணர்தல், உய்த்துணர்தல் மற்றும் தகவல்களைத் தெரிவித்தல் போன்ற முறையான செயல்பாடுகளை உள்ளடக்கியது.
(2) கணக்கியல் கீழ்க்கண்ட தகவல்களைத் தருகிறது:
(i) பெற்றிருக்கக்கூடிய வளங்கள்
(ii) பெற்றிருக்கக்கூடிய வளங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன, மற்றும்
(iii) அவற்றின் பயன்பாட்டினால் ஏற்படும் விளைவுகள்.

2. கணக்கியலின் பிரிவுகளை சுருக்கமாக கூறுக. [BEQ; First Mid-2018; July & HY.-'23]

விடை. கணக்கியல் பிரிவுகள் பின்வருமாறு :
(i) **நிதிநிலைக் கணக்கியல் :**
(1) இது நிதியியல் நடவடிக்கைகளையும், நிகழ்வுகளையும் பதிவு செய்யக் கூடியது.
(2) ஏற்கனவே நடந்து முடிந்த நடவடிக்கைகளை மற்றும் நிகழ்வுகளை கணக்கேடுகளில் பதிவு செய்து பராமரிப்பதே நிதிநிலை கணக்கியலாகும்.
(ii) **அடக்கவிலைக் கணக்கியல் :**
பொருட்கள் அல்லது சேவைகளின் அடக்க விலையைக் கணக்கிடுவதற்கு செலவு விவரங்களை சேகரித்து, பதிவு செய்து, வகைப்படுத்தி, செலவினங்களை ஒதுக்கீடு செய்வது அடக்கவிலை கணக்கியல் ஆகும்.
(iii) **மேலாண்மைக் கணக்கியல் :**
கணக்கியல் தகவல்களை நிர்வாகத்திற்கு தருவதன்மூலம் முடிவெடுப்பதற்கும், நிறுவனத்தின் அன்றாட செயல்பாடுகளுக்கும் துணைசெய்வதே மேலாண்மைக் கணக்கியல் ஆகும்.
(iv) **சமூகப் பொறுப்பு கணக்கியல் :**
இது வணிக நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்கள் கணக்கியல் தகவல்களை சமூகத்தின் பார்வையில் வழங்குவதாகும்.

3. கணக்கியலின் முக்கியத்துவத்தினை விரிவாக விளக்குக.
[BEQ; First Mid-'18; Mar & QY-'19; Sep. -'21; CRT-'22; Mar-'23]

விடை. கணக்கியலின் முக்கியத்துவம் கீழ்க்கண்டவாறு விளக்கப்படுகின்றன :
(i) **முறையான பதிவேடுகள் :**
ஒரு நிறுவனத்தின் அனைத்து நிதிசார்ந்த நடவடிக்கைகளும் கணக்கேடுகளில் முறையாகப் பதியப்படுகின்றன.
(ii) **நிதிநிலை அறிக்கைகள் தயாரித்தல் :**
வருமான அறிக்கை அல்லது வியாபாரம் மற்றும் இலாப நட்டக் கணக்கு மற்றும் இருப்பு நிலைக்குறிப்பு போன்ற நிதிநிலை அறிக்கைகளை காலமுறை தோறும் தயாரிப்பதன் மூலம் வணிகத்தின் இயக்க முடிவுகளையும், நிதிநிலையையும் அறிய முடியும்.
(iii) **வளர்ச்சியை மதிப்பிடல் :**
வணிகத்தின் நீர்மைத்தன்மை, இலாபத்தன்மை மற்றும் கடன் தீர்க்கும் திறன் ஆகியவற்றின் முழுமையான நிலையினை நிர்வாகத்திற்கு கணக்கியல் அளிக்கிறது.
(iv) **சட்டச் சான்றாக இருத்தல் :**
பொதுவாக நீதிமன்ற வழக்குகளிலும், இதர ஆணையங்களிலும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண, கணக்கேட்டுப் பதிவுகள் சான்றாக ஏற்கப்படுகின்றன.

4. கணக்கியல் தகவல்களில் பின்வரும் பயனீட்டாளர்கள் ஏன் ஆர்வமாக உள்ளனர்? [CRT-2022]
[அ] முதலீட்டாளர்கள் [ஆ] அரசு

விடை. (அ) **முதலீட்டாளர்கள் :**
(i) ஒரு நிறுவனத்தில் தங்களது நிதியை முதலீடு செய்யும் ஆர்வமுள்ளவர்கள் முதலீட்டாளர்கள்.
(ii) தாங்கள் இடும் முதல், இலாபகரமாக தங்களது கைக்கு திரும்ப வரவேண்டும் என நினைப்பது முதலீட்டாளர்களின் இயல்பே.
(iii) எனவே, நிறுவனத்தின் நிதி நிலையை அறிந்துகொள்ளவும், எதிர்கால இலாபம் மற்றும் இடம் ஏற்கும் திறன் போன்றவற்றை தெரிந்துகொள்ளவும் அதிக ஆர்வம் கொண்டிருப்பர்.
(ஆ) **அரசு :**
(i) வணிக நிறுவனங்கள், நாட்டின் அரிதான வளங்களைப் பயன்படுத்துகின்றன.
(ii) அரசாங்கம், வணிக நிறுவனங்களின் செயல்திறனை அறிந்து வைத்திருந்தால் மட்டுமே, அரிதான வளங்களை ஒதுக்கீடு செய்தல், வணிகம் மற்றும் தொழில்துறைச் சார்ந்த கொள்கை முடிவுகளை உருவாக்குதல், மானியம் மற்றும் சலுகைகள் வழங்குதல் போன்றவற்றிற்கான முடிவுகளை எடுக்க முடியும்.
(iii) மேற்கண்ட காரணத்தாலேயே, அரசு கணக்கியல் தகவல்களில் அதிகம் ஆர்வம் காட்டுகின்றது.

5. நவீன வணிக உலகில் கணக்காளரின் பங்களிப்பு பற்றி விளக்குக. [BEQ; HY. - 2018; Sep. - 2020; May - 2022; QY.'23]

விடை. ஒரு கணக்காளர் நிறுவனத்தின் கணக்கியல் வழிமுறைகளை வடிவமைக்கிறார். அவர் நிறுவனத்தில் கீழ்க்கண்ட பல்வேறு பணிகளில் பங்களிக்கிறார்.
(i) **ஏடுகளைப் பராமரிப்பவர் :**
(i) கணக்காளர் நிதிச் சார்ந்த நடவடிக்கைகளை முறையாக பதிவு செய்து ஏடுகளைப் பராமரிக்கிறார்.
(ii) அவர், நிதிநிலை அறிக்கைகளையும் பிற நிதி அறிக்கைகளையும் தயாரிக்கிறார்.
(ii) **நிர்வாகத்திற்குத் தகவல்களைத் தருபவர் :**
முடிவுகளை எடுக்கவும் மற்றும் கட்டுப்பாடுகளை விதிக்கவும், நிர்வாகத்திற்குத் தேவையான நிதிச் சார்ந்த தகவல்களை கணக்காளர் அளித்து உதவுகிறார்.

www.surabooks.com

www.surabooks.com

(iii) வணிகச் சொத்துக்களின் காப்பாளர் :

(i) கணக்காளர் சொத்துக்களுக்கான பதிவேடுகளைப் பராமரிப்பதன் மூலம், நிர்வாகம் அந்தச் சொத்துக்களைப் பாதுகாத்து கட்டுப்படுத்த முடிகிறது.

(ii) சொத்துக்களுக்கான காப்பீடு மற்றும் சொத்துகள் பராமரிப்பைப் பற்றிய ஆலோசனையை நிர்வாகத்திற்கு வழங்குகிறார்.

(iv) நிதி ஆலோசகர் :

கணக்காளர் நிதி சார்ந்த தகவல்களை பகுப்பாய்வு செய்து முதலீட்டுக்கான வாய்ப்புகள், செலவைக் குறைப்பதற்கான உத்திகள், மூலதன திட்டப்பட்டியல், எதிர்கால வளர்ச்சி மற்றும் விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புகள் போன்றவற்றை குறித்து வணிக மேலாளர்களுக்கு ஆலோசனை வழங்குகிறார்.

(v) வரி மேலாளர் :

(i) கணக்காளர், குறித்த காலத்தில் வருமானவரி விவரம் தயாரிப்பு செய்தல், தாக்கல் செய்தல் மற்றும் வருமான வரி செலுத்துதல் முதலியவற்றை உறுதி செய்கிறார்.

(ii) வரி மேலாண்மை, வரிச் சுமையை குறைத்தல், வரிவிலக்கு பெறுதல் போன்றவற்றில் மேலாளர்களுக்கு கணக்காளர் ஆலோசனை வழங்குகிறார்.

(vi) பொது தொடர்பு அலுவலர் :

கணக்காளர், தேவைப்படும் பயனீட்டாளர்களுக்கு கணக்கியல் பகுப்பாய்வு செய்யத் தேவைப்படும் விவரங்களை வழங்குகிறார்.

அரசு தேர்வு வினா-விடைகள்

1 மதிப்பெண்

1. கீழ்க்கண்டவற்றுள் விசித்திரமான ஒன்றை கண்டுபிடி. [BEQ; Govt. MQP - 2018]

(அ) கணக்குபதிவியல் (ஆ) கணக்கியல்
(இ) கணக்கேடுகள் பராமரிப்பு (ஈ) தள்ளுபடி

[விடை. (ஈ) தள்ளுபடி]

2. கணக்கியல் தகவல்களின் புறப்பயனாளராக கருதப்படுபவர் யார்? [BEQ; First Mid - 2018]

(அ) உரிமையாளர் (ஆ) முதலீட்டாளர்
(இ) பணியாளர் (ஈ) கடனீந்தோர்

[விடை. (ஆ) முதலீட்டாளர்]

3. லூகா பாசியோலி என்ற இத்தாலியர், இரட்டை பதிவு முறை கணக்கினை மேம்படுத்திய ஆண்டு. [BEQ; First Mid - 2018; QY. - 2019]

(அ) 1949 (ஆ) 1449 (இ) 1494 (ஈ) 1446

[விடை. (இ) 1494]

4. ______ ஆம் ஆண்டில் லூகா பாசியோலி என்ற இத்தாலியர் இரட்டைப்பதிவு கணக்கியல் முறையை மேம்படுத்தினார். [BEQ; QY. - 2018]

(அ) 1449 (ஆ) 1494 (இ) 1944 (ஈ) 1459

[விடை. (ஆ) 1494]

5. கணக்கியலில் எத்தனை அடிப்படைகள் உள்ளன? [Sep. - 2020]

(அ) ஒன்று (ஆ) இரண்டு (இ) மூன்று (ஈ) நான்கு

[விடை. (இ) மூன்று]

6. [BEQ; Govt. MQP - 2018]

	பட்டியல் I		பட்டியல் II
i.	கணக்கியல் அகப்பயனீட்டாளர்கள்	1	மனித வள கணக்கியல்
ii.	கணக்கியல் புறப்பயனீட்டாளர்கள்	2	வரி மேலாளர்
iii.	கணக்காளரின் பங்களிப்பு	3	ஆராய்ச்சியாளர்
iv.	கணக்கியலின் கிளை	4	ஊழியர்கள்

தொகுப்பு :

	(i)	(ii)	(iii)	(iv)
(அ)	1	2	3	4
(ஆ)	3	4	1	2
(இ)	4	3	2	1
(ஈ)	2	3	1	4

[விடை. (இ) (i) - 4 (ii) - 3 (iii) - 2 (iv) - 1]

7. இரட்டைப் பதிவு கணக்கியல் முறையை மேம்படுத்தியவர் : [Mar-'23]

(அ) ஆர்.என். கார்ட்டர் (ஆ) ஜே.ஆர். பேட்லிபாய்
(இ) எம்.சி. சுக்லா (ஈ) லூகா பாசியோலி

[விடை. (ஈ) லூகா பாசியோலி]

8. 'அர்த்தசாஸ்திரம்' என்ற புகழ்பெற்ற நூலை எழுதியவர் .... [July-'23]

(அ) கௌடில்யர் (ஆ) கம்பர்
(இ) வால்மீகி
(ஈ) சந்திரகுப்த மௌரியர்

[விடை. (அ) கௌடில்யர்]

3 மதிப்பெண்கள்

1. கீழ்காணும் குறுங்கட்டுரையைப் படித்துப் பார்த்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

கணக்கியல் வணிகத்தின் மொழியாகும். ஒரு மொழியின் முக்கியமான பணி. அது தகவல் தொடர்புக்கு உதவுவதாக இருக்க வேண்டும் கணக்கேடுகளில் பதிவு செய்யப்பட்ட நிதித் தகவல்களிலிருந்து, வணிக நிறுவனங்களின் செயல்பாட்டுத் திறன் மற்றும் நிதிநிலைப் பற்றிய தகவல்களைப் பெறலாம். பயனீட்டாளர்களுக்கு இத்தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன.

வினாக்கள் : [BEQ; Govt. MQP - 2018]

(i) கணக்கியல் தகவல்களை பயன்படுத்தும் ஏதேனும் இரண்டு புறப்பயனீட்டாளர்கள் யாவர்?

(ii) கணக்கியல் தகவல்களை பயன்படுத்தும் ஏதேனும் இரண்டு அகப்பயனீட்டாளர்கள் யாவர்?

(iii) ஏன் அவர்களுக்கு அந்த கணக்கியல் தகவல்கள் தேவைப்படுகிறது?

www.surabooks.com

விடை. (i) 1. கடனீந்தோர் மற்றும் நிதி நிறுவனங்கள்
2. முதலீட்டாளர்கள்
(ii) 1. உரிமையாளர்கள்
2. நிர்வாகம்
(iii) வணிக நிறுவனத்தின் இலாபம் மற்றும் நட்டத்தினை கண்டறிய கணக்கியல் தகவல்கள் தேவைப்படுகிறது.

2. கணக்கியலின் நோக்கங்கள் யாவை? [BEQ; June - 2019]

விடை. கணக்கியலின் நோக்கங்கள் பின்வருமாறு :
(i) நிதி நடவடிக்கைகள் மற்றும் நிகழ்வுகள் குறித்த முறையான பதிவேடுகளை வைத்திருத்தல்.
(ii) வணிக நிறுவனத்தின் இலாபம் அல்லது நட்டத்தை கண்டறிதல்.
(iii) வணிக நிறுவனத்தின் நிதிநிலை மற்றும் நிலையை அறிதல்.
(iv) பல்வேறு பயனீட்டாளர்களின் தேவைக்கேற்ப தகவல்களை வழங்குதல்.
(v) நிறுவனத்தின் சொத்துகளைப் பாதுகாத்தல் மற்றும்,
(vi) நிறுவனத்தின் கடன் தீர்க்கும் திறன் மற்றும் நீர்மைத்தன்மையை அறிதல்.

3. கணக்கியலின் பிரிவுகளை எழுக. [Aug. - 2022]

விடை. (i) நிதிநிலைக் கணக்கியல்
(ii) அடக்கவிலைக் கணக்கியல்
(iii) மேலாண்மைக் கணக்கியல்
(iv) சமூகப் பொறுப்பு கணக்கியல்
(v) மனிதவளக் கணக்கியல்

கூடுதல் வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும் :

1 மதிப்பெண்

(i) கீழ்க்கண்ட வினாக்களுக்கு சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 19ஆம் நூற்றாண்டில் தொழிற்புரட்சி ஏற்படக் காரணம்.
(அ) பஞ்சமும் பட்டினியும்
(ஆ) இயற்கைச் சீரழிவுகள்
(இ) அதிக அளவிலான மக்கள் தொகைப் பெருக்கம்
(ஈ) அரசர்களின் ஆதிக்கம்
[விடை. (இ) அதிக அளவிலான மக்கள் தொகைப் பெருக்கம்]

2. 19ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழிற்புரட்சியின் விளைவுகள்.
(அ) மக்கள் தொகை கட்டுப்பாடு
(ஆ) நாடுகள் பெருக்கம் (இ) இயற்கைச் சீரழிவுகள்
(ஈ) பேரளவு உற்பத்தி மற்றும் கடன் நடவடிக்கைகள்
[விடை. (ஈ) பேரளவு உற்பத்தி மற்றும் கடன் நடவடிக்கைகள்]

3. கணக்கியல் முறையில் குறிப்பிடத்தக்க அளவு மாற்றத்தை ஏற்படுத்தக் காரணம்.
(அ) தற்கால தொழில் நுட்பத்துறையில் ஏற்பட்ட மாற்றம்
(ஆ) சந்தையில் ஏற்பட்ட நிறைவுப் போட்டி
(இ) இவை இரண்டும்
(ஈ) இவற்றில் எதுவுமில்லை
[விடை. (இ) இவை இரண்டும்]

4. வணிகத்தின் நிதிசார் தகவல்களைச் சேகரித்து பக்குவப்படுத்தக் கூடிய முறையாக கருதப்படுவது.
(அ) பொருளியல் (ஆ) அறிவியல்
(இ) கணக்கியல் (ஈ) நிதியியல்
[விடை. (இ) கணக்கியல்]

5. பேரேட்டுக் கணக்குகளில் கணக்கியல் துல்லியத் தன்மையை அறிவதற்கு தயாரிக்கப்படுவது.
(அ) இருப்பாய்வு (ஆ) இருப்பு நிலைக்குறிப்பு
(இ) இலாப நட்டக் கணக்கு (ஈ) வியாபாரக் கணக்கு
[விடை. (அ) இருப்பாய்வு]

6. நடவடிக்கைகளுக்கு ஆதாரமாக விளங்கக்கூடிய ஆவணத்தினை அழைப்பது.
(அ) கணக்கு (ஆ) நடவடிக்கை
(இ) சான்றுச்சீட்டு (ஈ) இடாப்பு
[விடை. (இ) சான்றுச்சீட்டு]

7. வணிகத்தின் நிதிநிலையை அறிய இறுதியில் தயாரிக்கப்படுவது.
(அ) இருப்பு நிலைக் குறிப்பு
(ஆ) இருப்பாய்வு
(இ) வியாபாரக் கணக்கு
(ஈ) இலாப நட்டக் கணக்கு
[விடை. (அ) இருப்பு நிலைக் குறிப்பு]

(ii) பட்டியல் I–ல் உள்ளவற்றை பட்டியல் II–உடன் பொருத்திப் பார்த்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து உங்கள் விடையை தெரிவு செய்க.

1.

	பட்டியல் I		பட்டியல் II
i.	அகப் பயனீட்டாளர்கள்	1	ஏடுகளைப் பராமரித்தல்
ii.	புறப் பயனீட்டாளர்கள்	2	இருப்பாய்வு தயாரித்தல்
iii.	கணக்காளரின் பங்களிப்பு	3	வாடிக்கையாளர்கள்
iv.	கணக்கியல் சுழல்	4	உரிமையாளர்கள்.

தொகுப்பு :

	(i)	(ii)	(iii)	(iv)
(அ)	1	2	3	4
(ஆ)	4	1	2	3
(இ)	4	3	1	2
(ஈ)	2	3	4	1

[விடை. (இ) (i) - 4 (ii) - 3 (iii) - 1 (iv) - 2]

www.surabooks.com

2.

	பட்டியல் I		பட்டியல் II
i	முதல்	1	இடாப்பு
ii	எடுப்பு	2	பங்காதாயம்
iii	சான்றுச் சீட்டு	3	சரக்குகள் மற்றும் சொத்துகள்
iv	வருமானம்	4	உரிமையாளர்

தொகுப்பு :

	(i)	(ii)	(iii)	(iv)
(அ)	1	2	3	4
(ஆ)	4	3	1	2
(இ)	3	4	2	1
(ஈ)	2	3	4	1

[விடை. (ஆ) (i) - 4 (ii) - 3 (iii) - 1 (iv) - 2]

(iii) கீழ்க்கண்ட கோடிட்ட இடத்திற்கு சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.

1. _______ வணிகத்தின் ஒரு மொழியாகும்.

(அ) நிதி (ஆ) கணக்கியல்
(இ) பொருளியில் (ஈ) அறிவியல்

[விடை. (ஆ) கணக்கியல்]

2. ஒரு வணிகர் வணிகத்தை தொடங்குவதன் முக்கிய நோக்கம் _______ ஈட்டுவதாகும்.

(அ) இலாபம் (ஆ) நட்டம்
(இ) செலவுகள் (ஈ) நற்பெயர்

[விடை. (அ) இலாபம்]

3. திருப்பி அடைக்கப்பட வேண்டிய கடன்கள் _______ ஆகும்.

(அ) சொத்துகள் (ஆ) பொறுப்புகள்
(இ) பற்று (ஈ) வரவு

[விடை. (ஆ) பொறுப்புகள்]

4. ஒரேவகையான அனைத்து வணிக நடவடிக்கைகளையும் ஒருமுகப்படுத்துவது _______ எனப்படும்.

(அ) இனம் காணுதல்
(ஆ) பதிவு செய்தல்
(இ) வகைப்படுத்துதல்
(ஈ) வரிசைப்படுத்துதல் [விடை. (இ) வகைப்படுத்துதல்]

5. கணக்கியலின் முதல் படிநிலையானது, வணிகத்தின் _______ நடவடிக்கைகளை காண்பதாகும்.

(அ) பொருளியல் (ஆ) நிதி
(இ) கணக்கியல் (ஈ) சமூக [விடை. (ஆ) நிதி]

6. கணக்கியல் சுழலில் _______ தயார் செய்வது இறுதி படிநிலையாகும்.

(அ) இருப்பாய்வு (ஆ) வியாபாரக் கணக்கு
(இ) இருப்புநிலைக் குறிப்பு (ஈ) இலாப நட்டக் கணக்கு

[விடை. (இ) இருப்புநிலைக் குறிப்பு]

7. ஒரு வணிகம் பிறருக்கு செலுத்த வேண்டியவை _______ எனப்படும்.

(அ) சொத்து (ஆ) பொறுப்பு
(இ) முதல் (ஈ) எடுப்பு

[விடை. (ஆ) பொறுப்பு]

(iv) கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.

1. (அ) முதல்
(ஆ) எடுப்புகள்
(இ) இடாப்பு
(ஈ) இருப்பு நிலைக் குறிப்பு

[விடை. (ஈ) இருப்பு நிலைக் குறிப்பு]

காரணம் :

இருப்புநிலைக் குறிப்பு என்பது, ஒரு குறிப்பிட்ட நாளில் வணிகத்தில் உள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் நிலை பற்றிய அறிக்கையாகும். மற்ற மூன்றும் அடிப்படை கணக்கியலின் கலைச் சொற்கள் ஆகும்.

2. (அ) நிதி நிலை கணக்கியல்
(ஆ) இருப்பாய்வு
(இ) மேலாண்மைக் கணக்கியல்
(ஈ) அடக்கவிலை கணக்கியல்

[விடை. (ஆ) இருப்பாய்வு]

காரணம் :

இருப்பாய்வு என்பது ஒரு குறிப்பிட்ட நாளில் அனைத்துப் பேரேட்டுக் கணக்குகளிலும் உள்ள பற்று இருப்புகளையும் வரவு இருப்புகளையும் உள்ளடக்கிய ஓர் அறிக்கை ஆகும். மற்ற மூன்றும் கணக்கியலின் பிரிவுகள் ஆகும்.

(v) கீழ்க்கண்டவற்றுள் எது சரியாக பொருந்துகிறது?

1.
(அ) லூகா பாசியோலி – இரட்டைப் பதிவு முறை
(ஆ) தொழிற்புரட்சி – 20ம் நூற்றாண்டு
(இ) சமூக முன்னேற்றம் – 19 ம் நூற்றாண்டு
(ஈ) கணக்கியல் – அறிவியல்

[விடை. (அ) லூகா பாசியோலி - இரட்டைப் பதிவு முறை]

2.
(அ) ரொக்க நடவடிக்கை – குமார் அறைகலன் விற்றது
(ஆ) கொள்முதல் – சரக்குகளை விற்பது
(இ) தேய்மானம் – மதிப்பு குறைவது
(ஈ) வாராக்கடன் – பொறுப்பு

[விடை. (இ) தேய்மானம் - மதிப்பு குறைவது]

(vi) கீழ்க்கண்டவற்றுள் எது சரியாக பொருந்தவில்லை?

1.
(அ) அகப்பயனீட்டாளர்கள் - பணியாளர்கள்
(ஆ) புறப்பயனீட்டாளர்கள் - கடனீந்தோர்
(இ) வணிகத்தின் நிதிநிலை - குறிப்பேடு
(ஈ) அரசு - அரிதான வளம்

[விடை. (இ) வணிகத்தின் நிதிநிலை - குறிப்பேடு]

(vii) கீழ்க்கண்ட வாக்கியங்களை கருத்தில் கொள்க.

1. கூற்று (A) : வணிக மற்றும் பிற நிறுவனங்கள் பணம் அல்லது பண மதிப்பு அல்லது பொருளாதார வளங்களை உள்ளடக்கிய செயல்பாடுகளை மேற்கொள்கின்றன.

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com

காரணம் (R) : பல்வேறு நோக்கங்களுக்காக நிதி திரட்டுதலும் மற்றும் அதனை பயன்படுத்துவதும் முறையாக அறிவியல் பூர்வமாக மற்றும் சீரான முறையில் பதிவு செய்யப்பட வேண்டும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டை பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

(அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்.

(ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.

(இ) (A) சரி ஆனால் (R) தவறு

(ஈ) (A) தவறு ஆனால் (R) சரி

[விடை. (ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.]

2. கூற்று (A) : கணக்கியல் வணிகத்தின் ஒரு மொழியாகும்.

காரணம் (R) : ஒரு மொழியின் மிக முக்கியமான பணி அது தகவல் தொடர்புக்கு உதவுவதாக இருக்க வேண்டும்.

(அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்.

(ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.

(இ) (A) சரி ஆனால் (R) தவறு

(ஈ) (A) தவறு ஆனால் (R) சரி

[விடை. (அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்.]

3. கூற்று (A) : வணிகத்தின் நடவடிக்கைகள் அல்லது நிகழ்வுகள் பணமதிப்பில் பதியப்படுகின்றன.

காரணம் (R) : கணக்கியல் தகவல்களில் ஆர்வமுள்ள பயனீட்டாளர்களுக்கு, பகுப்பாய்வின் முடிவுகள் தெரிவிக்கப்பட வேண்டியதில்லை.

(அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்.

(ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.

(இ) (A) சரி ஆனால் (R) தவறு

(ஈ) (A) தவறு ஆனால் (R) சரி

[விடை. (இ) (A) சரி ஆனால் (R) தவறு]

(viii) சரியான கூற்றைக் கண்டறிக.

1. (I) கணக்கியல் விவரங்கள் பல்வேறு அகப் பயனீட்டாளர்களுக்கும், புறப் பயனீட்டாளர்களுக்கும் தேவைப்படுகின்றன.

(II) ஒரு வங்கியர் நிறுவனத்தின் கணக்கியல் வழிமுறைகளை வடிவமைக்கிறார்.

(III) நாட்டின் அரிதான வளங்கள் வணிக நிறுவனங்களால் பயன்படுத்தப்படுகின்றன.

(அ) I மட்டும் சரி (ஆ) II மட்டும் சரி

(இ) I மற்றும் III சரி (ஈ) I, II, மற்றும் III சரி

[விடை. (இ) I மற்றும் III சரி]

2. (I) அகப்பயனீட்டாளர்கள் என்பவர்கள் வணிக நிறுவனத்தின் உரிமையாளர்கள், நிர்வாகம் மற்றும் பணியாளர்கள் ஆவார்கள்.

(II) புறப்பயனீட்டாளர்கள் என்பவர்கள் நிறுவனத்திலுள்ள வெளியிலுள்ள நபர்கள்

(III) ஆராய்ச்சியாளர்கள் தங்களது ஆராய்ச்சிக்கு கணக்கியல் தகவல்களை பயன்படுத்தலாம்.

(அ) I மட்டும் சரி (ஆ) II மட்டும் சரி

(இ) III மட்டும் சரி (ஈ) I, II, மற்றும் III சரி

[விடை. (ஈ) I, II மற்றும் III சரி]

II. மிகக் குறுகிய வினாக்கள் : 2 மதிப்பெண்கள்

1. குறிப்பு வரைக : (i) ரொக்க நடவடிக்கை [BEQ]
(ii) கடன் நடவடிக்கை

விடை. (i) **ரொக்க நடவடிக்கை :** இது உடனடி ரொக்கம் பெறுதல் அல்லது உடனடி ரொக்கச் செலுத்தலை உள்ளடக்கிய ஒரு நடவடிக்கை ஆகும்.

(ii) **கடன் நடவடிக்கை :** இது ரொக்கம் உடனடியாக செலுத்தப்படாத அல்லது பெறப்படாத ஒரு நடவடிக்கை ஆகும். ஆனால், அதற்குப் பின்னர் ரொக்கம் செலுத்தப்படும் அல்லது பெறப்படும்.

2. முதல் என்றால் என்ன?

விடை. முதல் என்பது ஒரு நிறுவனத்தில் அதன் உரிமையாளர் செய்த முதலீட்டைக் குறிக்கும்.

3. சான்றுச்சீட்டு என்றால் என்ன?

விடை. (1) ஒரு வணிக நடவடிக்கைக்கு ஆதாரமான எழுத்து வடிவிலான அல்லது அச்சிடப்பட்ட ஆவணம் சான்றுச் சீட்டு ஆகும்.

(2) **எடுத்துக்காட்டுகள் :**
ரொக்க ரசீது, இடாப்பு, வங்கிச் செலுத்துச் சீட்டு.

4. இடாப்பு என்றால் என்ன?

விடை. (1) இது விற்பனையாளரால் தயாரிக்கப்பட்டு, வாங்குபவருக்கு அளிக்கப்படும் அறிக்கை.

(2) இதில் சரக்குகளின் அளவு, விலை, மதிப்பு, முதலியவற்றின் விவரங்கள், அளித்த தள்ளுபடி, மற்றும் வாங்குபவர் இறுதியாகச் செலுத்த வேண்டிய நிகரத் தொகை ஆகியவை இடம்பெற்றிருக்கும்.

III. குறுகிய வினாக்கள் : 3 மதிப்பெண்கள்

1. கணக்கியல் சுழலின் படிநிலைகளை விளக்குக.

விடை. **கணக்கியல் சுழலின் படிநிலைகள் பின்வருமாறு :**

(i) **நடவடிக்கைகளை இனம் கண்டு குறிப்பேட்டில் பதிவு செய்தல் :**

(1) கணக்கியலின் முதல் படிநிலையானது வணிகத்தின் நிதி நடவடிக்கைகளை அடையாளம் காண்பதாகும்.

(2) அனைத்து பணமதிப்பிலான நடவடிக்கைகள் தோற்றப்பதிவேடுகளில் (குறிப்பேடு) பதிவு செய்யப்படுகிறது.

www.surabooks.com

(ii) எடுத்தெழுதுதல் மற்றும் இருப்புக் கட்டுதல் :

(1) பதிவுகளைக் குறிப்பேட்டிலிருந்து பேரேட்டிற்கு மாற்றுவது எடுத்தெழுதுதல் எனப்படும்.

(2) பதிவுகள் பொதுவான தலைப்பின்கீழ் வகைப்படுத்தப்பட்டு, பேரேட்டில் ஒவ்வொரு கணக்கிலும் எடுத்தெழுதப்படுகின்றன.

(iii) இருப்பாய்வு தயாரித்தல் :

(1) பேரேட்டு இருப்புகளின் பட்டியல் அதாவது இருப்பாய்வு தயாரித்தல், அடுத்த படிநிலையாகும்.

(2) இருப்பாய்வின் அடிப்படையில் நிதிநிலை அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன.

(iv) வியாபாரக் கணக்கு தயாரித்தல் :

(1) குறிப்பிட்ட கணக்காண்டிற்குரிய வியாபாரக் கணக்கு தயாரிப்பதே கணக்கியல் சுழலின் அடுத்த படிநிலையாகும்.

(2) அனைத்து நேரடிச் செலவுகள் மற்றும் நேரடி வருவாய்கள் வியாபாரக் கணக்கிற்கு மாற்றப்படுகின்றன.

(v) இலாப நட்டக் கணக்கு தயாரித்தல் :

(1) குறிப்பிட்ட கணக்காண்டிற்குரிய இலாப நட்டக் கணக்கு தயார் செய்வது கணக்கியல் சுழலின் அடுத்த படிநிலையாகும்.

(2) மொத்த இலாபத்துடன் அல்லது மொத்த நட்டத்துடன் அனைத்து மறைமுக வருவாய்கள் மற்றும் மறைமுகச் செலவுகள் இலாபநட்டக் கணக்கிற்கு மாற்றப்படுகின்றன.

(vi) இருப்பு நிலைக்குறிப்பு தயாரித்தல் :

(1) கணக்கியல் சுழலில் இருப்புநிலைக்குறிப்பு தயார் செய்வது இறுதி படிநிலையாகும்.

(2) இருப்புநிலைக்குறிப்பு, சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் இருப்புகளைக் காட்டும் ஒரு அறிக்கை.

2. கணக்கியலின் பணிகளை விளக்குக.

விடை. கணக்கியலின் பணிகள் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகின்றன :

(i) அளவிடுதல் :

வணிக நடவடிக்கைகள் குறித்து முறையான ஆவணங்களை வைத்திருத்தல், பதிவு செய்தல், எடுத்தெழுதுதல், கடைசியாக இறுதிக் கணக்குகளைத் தயாரித்தல் ஆகியவையே கணக்கியலின் முதன்மையான பணியாகும்.

(ii) முன்னறிதல் :

வணிக நிறுவனங்களின் எதிர்கால செயல் திறன் மற்றும் நிதிநிலை பற்றி கணக்கியலின் பல்வேறு கருவிகளின் மூலம் முன்கூட்டியே அறிந்துகொள்ள முடிகிறது.

(iii) ஒப்பிடுதல் :

கணக்கியல், நிகழ்ந்த செயல்திறனுடன், திட்டமிட்ட செயல்திறனை ஒப்பிட உதவுகிறது. மேலும், இது கணக்கியல் கொள்கைகளுடனும் ஒப்பிட உதவுகிறது.

(iv) முடிவெடுத்தல் :

திட்டமிடுதல், செயல்திறன் மதிப்பீடு, கட்டுப்பாடு ஆகிய மேலாண்மை பணிகளுக்கான தகவல்களை நிர்வாகத்திற்கு கணக்கியல் வழங்குகிறது.

(v) கட்டுப்பாடு :

கணக்கியல் ஒரு கட்டுப்பாட்டுக் கருவியாக இருப்பதால், கையாண்ட பல்வேறு வழிமுறைகள் குறித்த பலம் மற்றும் பலவீனங்களைக் கண்டறிந்து, கருத்து தெரிவிக்க முடிகிறது. மேலும், வணிக கொள்கைகள் மற்றும் திட்டங்கள் கடைபிடிக்கப்பட்டனவா என்பதை மதிப்பீடு செய்யும் கருவியாக இது பயன்படுகிறது.

3. குறிப்பு வரைக : (i) கொள்முதல் திருப்பம் (ii) விற்பனைத் திருப்பம்

விடை. (i) கொள்முதல் திருப்பம் அல்லது வெளித் திருப்பம் :

கொள்முதல் செய்த சரக்குகளை சரக்கு அளித்தோரிடம் திருப்பி அனுப்புவது கொள்முதல் திருப்பம் அல்லது வெளித்திருப்பம் என்று அழைக்கப்படுகிறது.

(ii) விற்பனைத் திருப்பம் அல்லது உள் திருப்பம் :

விற்பனை செய்த சரக்குகள் வாடிக்கையாளர்களிடமிருந்து திரும்பப் பெறப்பட்டால் அது விற்பனைத் திருப்பம் அல்லது உள் திருப்பம் என்று அழைக்கப்படுகிறது.

4. அகப் பயனீட்டாளர்களை பற்றி எழுதுக.

விடை. அகப் பயனீட்டாளர்கள் :

அகப்பயனீட்டாளர்கள் என்பவர்கள் வணிக நிறுவனத்தின் உரிமையாளர்கள், நிர்வாகம் மற்றும் பணியாளர்கள் ஆவார்கள்.

(i) உரிமையாளர்கள் :

வணிக நிறுவனத்தில் பயன்படுத்தப்படும் மூலதனத்தொகையை அளிப்பவர்களே உரிமையாளர்கள் எனப்படுகின்றனர்.

(ii) நிர்வாகம் :

(1) பெரும்பாலான முடிவுகளை நிர்வாகம் எடுப்பதற்கு கணக்கியலின் விவரங்கள் அடிப்படையாக இருக்கின்றன.

(2) வணிகச் செயல்பாடுகளின் திட்டமிடுதல் மற்றும் கட்டுப்பாட்டிற்கு நிர்வாகத்திற்கு பல முக்கியமான நிதிசார்ந்தத் தகவல்கள் தேவைப்படுகின்றன.

(3) நிதி நிலை கணக்கியலில் தயாரிக்கப்படும் நிதியியல் அறிக்கைகள் மற்றும் பிற அறிக்கைகள் நிர்வாகத்திற்கான தகவல்களை அளிக்கின்றன.

(iii) பணியாளர்கள் :

பணியாளர்கள் தங்களது ஊதியம், பணியாற்றும் சூழ்நிலைகள், ஓய்வு பலன்கள் போன்றவற்றை நிர்ணயிக்கும் வணிகத்தின் இலாபம் ஈட்டும் திறன், வணிகத்தின் நிலைத்தன்மை மற்றும் வளர்ச்சி பற்றி அறிய ஆர்வமாக இருப்பார்கள்.

❖ ❖ ❖

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

அலகு 2

கணக்கியலின் கருத்துக் கட்டமைப்பு

பொருளடக்கம்

2.1 கணக்கேடுகள் பராமரிப்பு – ஓர் அறிமுகம்.

2.1.1 கணக்கேடுகள் பராமரிப்பின் பொருள்.

2.1.2 கணக்கேடு பராமரிப்புகள் – வரைவிலக்கணம்.

2.1.3 கணக்கேடுகள் பராமரிப்பின் இயல்புகள்

2.1.4 கணக்கேடுகள் பராமரிப்பின் நோக்கங்கள்

2.1.5 கணக்கேடுகள் பராமரிப்பின் நன்மைகள்

2.1.6 கணக்கேடுகள் பராமரிப்பின் குறைபாடுகள்

2.2 கணக்கேடுகள் பராமரிப்பிற்கும் கணக்கியலுக்கும் இடையேயான வேறுபாடுகள்.

2.3 கணக்கேடுகள் பராமரிப்பு, கணக்கியல் மற்றும் கணக்குப்பதிவியலுக்குமான உறவுமுறை.

2.4 கணக்கியல் கோட்பாடுகள்.

2.5 கணக்கியல் தரநிலைகள்.

2.5.1 கணக்கியல் தரநிலைகளின் தேவை

2.6 பன்னாட்டு நிதி அறிக்கை தரநிலைகள்.

2.7 இந்தியாவில் கணக்கியல் தரநிலைகள்.

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com

புத்தக வினாக்கள் மற்றும் விடைகள்

சுய ஆய்வு வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும் :

1. வணிகத்தின் உரிமையாளர் இட்ட முதலிற்கு, வணிக நிறுவனம் கடன்பட்டிருக்கிறது என்பதை கூறும் கருத்து.
[BEQ; Govt. MQP-'18; QY.-'18 & '23; Mar.-'19; Sep. - 2021]

(அ) பண மதிப்பீட்டுக் கருத்து
(ஆ) அடக்கவிலை கருத்து
(இ) வணிகத்தனித்தன்மை கருத்து
(ஈ) இரட்டைத்தன்மை கருத்து

[விடை. (இ) வணிகத்தனித்தன்மை கருத்து]

2. வணிகம் நீண்டகாலம் தொடர்ச்சியாக நடைபெறும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது.
[QY. - 2018; Sep. - 2020; CRT-2022; July-'23; Mar-'24]

(அ) வணிக தனித்தன்மை கருத்து
(ஆ) நிறுவன தொடர்ச்சி கருத்து
(இ) கணக்கியல் கால அனுமானம்
(ஈ) முன்னெச்சரிக்கை கொள்கை

[விடை. (ஆ) நிறுவன தொடர்ச்சி கருத்து]

3. GAAP என்பது :
[BEQ; First Mid - 2018; HY. - 2019; May - 2022; Mar-'24]

(அ) பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள்
(ஆ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள்
(இ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் வழிமுறைகள்
(ஈ) இவற்றுள் ஏதுமில்லை

[விடை. (ஆ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள்]

4. இறுதி சரக்கிருப்பு, அடக்க விலை அல்லது விற்று ஈட்டக்கூடிய மதிப்பு இதில் எது குறைவோ அதனடிப்படையில் மதிப்பிடப்படும் என்ற கணக்கியல் கோட்பாடு.
[HY. - 2018; Sep. - 2021; Aug. - 2022]

(அ) முக்கியத்துவ மரபு
(ஆ) பண மதிப்பீட்டுக் கருத்து
(இ) முன்னெச்சரிக்கை மரபு
(ஈ) நிகழ்வு தீர்வு / கருத்து

[விடை. (இ) முன்னெச்சரிக்கை மரபு]

5. இந்தியாவில், கணக்கியல் தரநிலைகளை வழங்கும் அமைப்பு. [Govt. MQP; First Mid & QY.-'18 & '23; HY.-'18 & '23; June - 2019; Mar. & July-'23]

(அ) இந்திய மைய வங்கி
(ஆ) இந்திய அடக்கவிலை மற்றும் கணக்காளர் நிறுவனம்
(இ) உச்ச நீதி மன்றம்
(ஈ) இந்தியப் பட்டயக் கணக்காளர் நிறுவனம்

[விடை. (ஈ) இந்தியப் பட்டயக் கணக்காளர் நிறுவனம்]

II. மிகக் குறுகிய வினாக்கள் :

1. கணக்கேடுகள் பராமரிப்பை வரையறு.
[BEQ; Govt. MQP & First Mid - '18; Mar. -'19; July & HY.-'23]

விடை. ஜே. ஆர். பேட்லிபாய் அவர்களின் கூற்றுப்படி "கணக்கேடுகள் பராமரிப்பு என்பது வணிக நடவடிக்கைகளை ஏடுகளில் பதிவு செய்யும் ஒரு கலையாகும்.

2. கணக்கியல் கருத்துக்கள் என்றால் என்ன?

விடை. (i) கணக்கியல் கருத்துக்கள் என்பது கணக்கியல் அடிப்படை அனுமானங்களாகும்.
(ii) மேலும் கணக்கியல் கருத்துக்கள் என்பது பரந்து ஒருமித்த கருத்துக்களின் விளைவாகும்.
(iii) பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட எண்ணம் அல்லது சாராம்சம் கருத்து எனப் பொருள்படும்.

3. தீர்வு கருத்து பற்றி சுருக்கமாக விவரிக்க. [CRT - 2022]

விடை. (i) தீர்வு கருத்தின்படி, ஒரு சொத்தின் மதிப்பில் ஏற்படும் மாற்றம் அச்சொத்துக்கள் வணிகத்தால் தீர்வு செய்யப்படும் போது மட்டுமே பதிவு செய்யப்படும்.
(ii) புராதன அடக்க விலையில் சொத்துக்கள் பதிவு செய்தால், சொத்தின் மதிப்பில் ஏற்படும் மாற்றம் அச்சொத்து தீர்வு செய்யும் போது மட்டுமே கணக்கில் கொண்டு வரப்பட வேண்டும்.

4. கணக்கியலில் முழு வெளியீட்டு கொள்கை என்றால் என்ன? [BEQ; HY.-2018; Sep. - 2020; CRT - 2022; QY.-'23]

விடை. (i) கணக்குகள் நேர்மையாக தயாரிக்கப்பட வேண்டும். மேலும், அனைத்து முக்கியத் தகவல்களும் நிதிநிலை அறிக்கை மூலமாக வெளிப்படுத்த வேண்டுமென்பதை இம்மரபு வலியுறுத்துகிறது.
(ii) பெரும்பாலான நிறுவனங்களில் நிர்வாகமும், உரிமையாளர்களும் வேறுபடுத்தப்பட்டிருப்பதால் இந்த மரபு முக்கியத்துவம் பெறுகிறது.

5. நிலைத்தன்மை மரபு குறித்து சிறு குறிப்பு வரைக.
[Sep. - 2020 & 2021]

விடை. ஒரே விதமான கணக்கியல் கொள்கைகள் பின்பற்றப்பட்டால்தான் வெவ்வேறு ஆண்டுகளின் முடிவுகளை ஒப்பீடு செய்யமுடியும். உதாரணமாக, ஒரு நிறுவனம், நிலைச்சொத்து வாங்கியதிலிருந்தே நேர்க்கோட்டு தேய்மான முறையைப் பின்பற்றினால், தொடர்ச்சியாக அதையே பின்பற்ற வேண்டும்.

III. குறுகிய வினாக்கள் :

1. பொருத்துகை கருத்து என்றால் என்ன? ஏன் ஒரு வணிக அமைப்பு இக்கருத்தைப் பின்பற்ற வேண்டும்? [QY. - 2019]

விடை. (i) பொருத்துகைக் கருத்து ஒரு குறிப்பிட்ட கணக்காண்டில் ஈட்டிய வருவாய், அவ்வருவாயை ஈட்ட அவ்வாண்டில் செய்த செலவுகளோடு ஒப்பிடப்படுவதைக் குறிக்கும்.
(ii) இது நிகழ்வுத் தீர்வு கருத்து மற்றும் கணக்கியல் காலக் கருத்தினை அடிப்படையாகக் கொண்டதாகும்.

www.surabooks.com

(iii) கணக்கியல் காலக்கருத்து, நிறுவனத்தின் திறனை அளவிடவும் மற்றும் நிதிநிலையை தீர்மானிப்பதற்குமான காலக்கெடுவை நிர்ணயிக்கிறது.

வணிக அமைப்பு பொருத்துகை கருத்தை பின்பற்ற வேண்டியதன் காரணங்கள் :

(1) குறிப்பிட்ட ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் அனைத்தும் கணக்கில் கொள்ளப்படாமல் அந்தக் கணக்காண்டிற்குரிய செலவுகள் மட்டுமே கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

(2) இக்கருத்தின் அடிப்படையில், கொடுபட வேண்டிய மற்றும் முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் மற்றும் பெற வேண்டிய அல்லது முன்கூட்டிப் பெற்ற வருமானங்கள் போன்றவற்றிற்கு சரிக் கட்டுதல்கள் செய்யப்படவேண்டும்.

(3) மேற்கண்ட காரணத்தாலேயே, ஒரு வணிக அமைப்பு பொருத்துகை கருத்தை பின்பற்ற வேண்டும் என சொல்லப்படுகின்றது.

2. 'பணம் சார்ந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்கியலில் பதியப்படுதல் வேண்டும்' - விவரி.
[BEQ; Govt. MQP - 2018; June - 2019; Mar-'23]

விடை. (i) பணமதிப்பீட்டுக் கருத்தின்படி, எந்த நடவடிக்கைகளைப் பணத்தால் அளவிட முடியுமோ, அந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்குகளில் பதியப்பட வேண்டும் என்பதைக் குறிக்கிறது.

(ii) பணமானது பரிமாற்றத்தின் ஊடகமாக விளங்குவதால் பணத்தால் அளவிடக்கூடிய நடவடிக்கைகள் பதிவு செய்யப்படுகின்றன.

(iii) கணக்கியலின், அளவீட்டு அலகாக, ஒரு நாட்டினுடைய நாணயம் அமைகிறது.

(iv) பணம் சாராத நடவடிக்கைகள் கணக்கேடுகளில் பதியப்படுவதில்லை. உதாரணமாக, பணியிட சூழல்கள், பணியாளர்களின் வேலைநிறுத்தம், நிர்வாகத்திறன் போன்றவை பணத்தால் அளவிடமுடியாததால் கணக்கேடுகளில் பதியப்படுவதில்லை.

3. 'ஒரு வணிக நிறுவனம் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும்' - இந்த வாக்கியத்தை அடிப்படையாகக் கொண்ட கணக்கியல் கருத்தை விளக்குக. **[Mar-'23]**

விடை. 'ஒரு வணிக நிறுவனம் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும்'– இந்த வாக்கியத்தை அடிப்படையாகக் கொண்ட கணக்கியல் கருத்து **நிறுவனத் தொடர்ச்சி கருத்து** ஆகும்.

(1) இது ஒரு அடிப்படை கருத்து. இதன்படி, ஒரு வணிக நிறுவனம் தொடரக்கூடியது மற்றும் நீண்ட காலத்திற்கு தொடர்ந்து செயலாற்றும் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையிலேயே நடத்தப்பட்டு வருகிறது.

(2) இக்கருத்தின் அடிப்படையில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை மதிப்பீடு செய்தல், நிலைச்சொத்தின் மீதான தேய்மானம், கொடுபட வேண்டிய மற்றும் முன்கூட்டிச் செலுத்திய செலவுகள், பெற வேண்டிய மற்றும் கூடியுள்ள வருமானம் போன்றவைகளின் கணக்கியல் வழிமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

4. கணக்கியல் தரநிலைகள் குறித்து சிறு குறிப்பு வரைக.

விடை. (1) கணக்கியலில் பின்பற்றப்படவேண்டிய கட்டமைப்பையும், விதிகளையும் கணக்கியல் தரநிலைகள், தருவதால், வெவ்வேறு நிறுவனங்களின் நிதிநிலை அறிக்கைகளை ஒப்பீடு செய்யமுடிகிறது.

(2) நிதிநிலை அறிக்கை தயார் செய்வதில் நிலைத்தன்மை, ஒப்பீட்டுதன்மை, நிறைவுத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு கணக்கியல் கோட்பாடுகளை தர நிர்ணயம் செய்வது அவசியமாகிறது.

(3) கணக்கியல் தரநிலைகள் என்பது கணக்கியல் நடவடிக்கைகள் மற்றும் நிகழ்வுகளை அடையாளம் கண்டு, அளவிட்டு, பதிவு செய்து, தகவல்களை நிதி அறிக்கை வாயிலாக வெளிப்படுத்துவதற்காக கணக்கியல் வல்லுநர் குழு அல்லது அரசு அல்லது பிற ஒழுங்காற்று அமைப்புகளால் வெளியிடப்படும் கொள்கை ஆவணங்களாகும்.

அரசு தேர்வு வினா-விடைகள்

1 மதிப்பெண்

1. "கணக்கு ஏடுகள் பராமரிப்பு என்பது வணிக நடவடிக்கைகளை ஏடுகளில் பதிவு செய்யும் ஒரு கலையாகும்." - என கூறியவர் : **[June - 2019]**

(அ) ஆர். என். கார்ட்டர் (ஆ) மென்ஹார்
(இ) ஜே.ஆர். பேட்லிபாய் (ஈ) கோஹ்லர்

[விடை. (இ) ஜே.ஆர். பேட்லிபாய்]

2. கூற்று (A) : கணக்கேடுகள் பராமரிப்பு நிலையான மற்றும் நம்பகமான பதிவேட்டை தருகிறது.

காரணம் (R) : நடவடிக்கைகள் முறையான காலவரிசைப்படி கணக்கேடுகளில் எழுதப்படுகின்றன.

[BEQ; Govt. MQP - 2018]

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டை பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

(அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்.

(ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.

(இ) (A) சரி ஆனால் (R) தவறு

(ஈ) (A) தவறு ஆனால் (R) சரி

[விடை. (ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும், (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல]

3. கணக்கியல் கோட்பாட்டின்படி சொத்துகள் பதியப்படுவது : **[CRT - 2022]**

(அ) அடக்கவிலை (ஆ) சந்தை விலை
(இ) மறு விற்பனை விலை (ஈ) அதிகபட்ச விலை

[விடை. (அ) அடக்கவிலை]

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com

2 மதிப்பெண்கள்

1. நடவடிக்கைகளை பதிவு செய்வதில் பின்பற்றப்படும் அணுகுமுறைகள் யாவை? [BEQ; First Mid - 2018]

விடை. நடவடிக்கைகளைப் பதிவு செய்வதில் இரண்டு விதமான அணுகுமுறைகள் உள்ளன.

அவையாவன,

(i) கணக்கியல் சமன்பாட்டு முறை

(ii) பாரம்பரிய அணுகுமுறை

2. கணக்கேடுகள் பராமரிப்பின் நன்மைகள் இரண்டினைத் தருக? [QY. - 2019]

விடை. கணக்கேடுகள் பராமரிப்பின் நன்மைகளாவன :

(i) நடவடிக்கைகள் அனைத்தும் முறையாக, கால வரிசைப்படி கணக்கேடுகளில் பதியப்படுகின்றன. இதனால், அனைத்து வணிக நடவடிக்கைகளுக்கும், கணக்கு ஏடு பராமரிப்பு நிரந்தரமான மற்றும் நம்பகத் தன்மையுள்ள ஆவணங்களை அளிக்கிறது.

(ii) கணக்கேடுகள் பராமரிப்பு நிதித் தகவல்கள் பெற உதவுகிறது.

3 மதிப்பெண்கள்

1. கணக்கியலின் கோட்பாடுகளில் ஏதேனும் மூன்றினை விளக்குக. [BEQ; First Mid - 2018]

விடை. 1. வணிகத் தனித்தன்மை கருத்து : [Mar. - 2019]

அ) இந்தக் கருத்தின்படி, வணிகநிறுவனம், முதல் இடுகின்ற உரிமையாளர் அல்லது உரிமையாளர்களிடமிருந்து தனித்து மற்றும் வேறுபட்டுள்ளதாக கருதப்படுகிறது.

ஆ) இக்கருத்தின் அடிப்படையில் கணக்குகள், உரிமையாளரின் கண்ணோட்டத்தில் இல்லாமல் வணிக நிறுவனத்தின் கண்ணோட்டத்தில் தயாரிக்கப்படுகின்றன.

இ) ஆதலால், உரிமையாளரின் முதல், நிறுவனம் செலுத்த வேண்டிய ஒரு பொறுப்பாகும்.

2. பணமதிப்பீட்டுக் கருத்து : [QY. - 2019]

அ) பணமதிப்பீட்டுக் கருத்தின்படி, எந்த நடவடிக்கைகளைப் பணத்தால் அளவிட முடியுமோ, அந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்குகளில் பதியப்பட வேண்டும் என்பதைக் குறிக்கிறது.

ஆ) பணமானது பரிமாற்றத்தின் ஊடகமாக விளங்குவதால் பணத்தால் அளவிடக்கூடிய நடவடிக்கைகள் பதிவு செய்யப்படுகின்றன. கணக்கியலின், அளவீட்டு அலகாக, ஒரு நாட்டினுடைய நாணயம் அமைகிறது.

3. நிறுவனத் தொடர்ச்சி கருத்து : [Mar. - 2019]

அ) இது ஒரு அடிப்படை கருத்து. இதன்படி, ஒரு வணிக நிறுவனம் தொடரக்கூடியது மற்றும் நீண்ட காலத்திற்கு தொடர்ந்து செயலாற்றும் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையிலேயே நடத்தப்பட்டு வருகிறது.

ஆ) இக்கருத்தின் அடிப்படையில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை மதிப்பீடு செய்தல், நிலைச்சொத்தின் மீதான தேய்மானம், கொடுபட வேண்டிய மற்றும் முன்கூட்டிச் செலுத்திய செலவுகள், பெற வேண்டிய மற்றும் கூடியுள்ள வருமானம் போன்றவைகளின் கணக்கியல் வழிமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2. கணக்கேடுகள் பராமரிப்பின் இயல்புகள் யாவை? [First Mid - 2018]

விடை. கணக்கேடுகள் பராமரிப்பின் இயல்புகள் பின்வருமாறு :

(i) இது வணிக நடவடிக்கைகளை, கணக்கேடுகளில் பதிவு செய்வதற்கான செயல்முறை ஆகும்.

(ii) பண மதிப்பிலான நடவடிக்கைகள் மட்டுமே கணக்கேடுகளில் பதியப்படுகின்றன.

(iii) கணக்கேடுகளின் பராமரிப்பே, கணக்கியல் செயல்பாட்டின் முதன்மை நிலை ஆகும்.

(iv) கணக்கேடுகள் பராமரிப்பானது குறிப்பேட்டில் பதிதல் மற்றும் பேரேட்டில் எடுத்தெழுதுதல் ஆகியவற்றை உள்ளடக்கியது.

3. கணக்கேடுகள் பராமரிப்பிற்கும் கணக்கியலுக்கும் இடையேயான வேறுபாடுகள் யாவை? [BEQ; First Mid - 2018; Mar-'24]

விடை.

வ. எண்	வேறுபாட்டிற்கான அடிப்படை	கணக்கேடுகள் பராமரிப்பு	கணக்கியல்
1	செயல் பரப்பு	வணிக நடவடிக்கைகளை பதிவு செய்தல் மற்றும் வகைப்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது ஆகும்.	நிதித் தகவல்களை, கணக்கேடுகளில் பதிவு செய்தல், வகைப்படுத்துதல், பகுப்பாய்வு மற்றும் உய்த்துணர்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது.
2	நிலை	கணக்கேடுகள் பராமரிப்பு, கணக்கியலின் தொடக்க நிலையாகும். இது கணக்கியலின் அடிப்படையாக விளங்குகிறது.	இது தொடக்க நிலை மட்டுமின்றி இரண்டாம் நிலையான பகுப்பாய்வு மற்றும் உய்த்துணர்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது.
3	பணி இயல்பு	இது வழக்கமான மற்றும் எழுத்தர் பணி தன்மை கொண்டது.	இது பகுப்பாய்வுத் தன்மை கொண்டது.
4	தேவையான அறிவு	இதற்கு குறிப்பேட்டில் பதிவு செய்தல், எடுத்தெழுதுதல் சார்ந்த அடிப்படை அறிவு தேவைப்படுகிறது.	கணக்கியல் பதிவுகளை மேற்கொள்ள கணக்கியல் விதிமுறைகள், செயல்முறைகள் மற்றும் நடைமுறைகள் சார்ந்த முழுமையான அறிவு தேவைப்படுகிறது.
5	தேவையான திறன்	பகுப்பாய்வு திறன் கணக்கு பராமரிப்பிற்கு தேவையில்லை.	கணக்கியலுக்கு பகுப்பாய்வு திறன் தேவைப்படுகிறது.

www.surabooks.com

கூடுதல் வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும் :

1 மதிப்பெண்

(i) கீழ்க்கண்ட வினாக்களுக்கு சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தனித்தன்மை அனுமானமானது நிறுவனத்தை இவரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டும்.

(அ) உரிமையாளர் (ஆ) வங்கியர்
(இ) அரசு (ஈ) பணியாளர்

[விடை. (அ) உரிமையாளர்]

2. நிறுவனத் தொடர்ச்சி அனுமானத்தின்படி நிறுவனத்தின் ஆயுள்.

(அ) மிக குறுகலானது என்று கூறுகின்றது.
(ஆ) மிக நீளமானது என்று கூறுகின்றது.
(இ) இவை இரண்டும்.
(ஈ) இவை ஏதுமில்லை.

[விடை. (ஆ) மிக நீளமானது என்று கூறுகின்றது.]

3. குறிப்பிட்ட கணக்காண்டின் அடக்கவிலையை வருவாயோடு ஒப்பு நோக்குவது. [BEQ]

(அ) பொருத்துகை கருத்து
(ஆ) புராதன அடக்கவிலை கருத்து
(இ) முழு வெளிப்பாட்டுக் கருத்து
(ஈ) இரட்டைத்தன்மை கருத்து

[விடை. (அ) பொருத்துகை கருத்து]

4. இரட்டைத் தன்மைக் கருத்துப்படி ஒவ்வொரு வணிக நடவடிக்கையும்.

(அ) ஒரு தன்மையுடையது
(ஆ) இரு தன்மையுடையது
(இ) மூன்று தன்மைகளை கொண்டுள்ளது
(ஈ) இவை எதுவுமில்லை

[விடை. (ஆ) இரு தன்மையுடையது]

5. உண்மை உணர்த்தும் கொள்கை முக்கியமான தகவல்களை.

(அ) வெளிப்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும்.
(ஆ) வெளிப்படுத்தாமல் இருக்க வேண்டும்.
(இ) கட்டாயம் தெரிவிக்க கூடியதாய் இருக்க வேண்டும்.
(ஈ) இவை ஏதுமில்லை.

[விடை. (அ) வெளிப்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும்.]

6. பொருத்துகை கருத்தின்படி ஒப்பிடப்படும் இனங்கள்.

(அ) அடக்கம் மற்றும் ஈட்டிய வருவாய்
(ஆ) அடக்கம் மற்றும் ஈட்டிய இலாபம்
(இ) அடக்கம் மற்றும் ஈட்டிய நட்டம்
(ஈ) அடக்கம் மற்றும் ஈட்டிய செலவு

[விடை. (அ) அடக்கம் மற்றும் ஈட்டிய வருவாய்]

7. ஈட்டிய ஆதாயத்தைக் குறிப்பது [BEQ]

(அ) வருவாய் (ஆ) கொள்முதல்
(இ) விற்பனை (ஈ) இலாபம்

[விடை. (அ) வருவாய்]

8. கணக்கியலின் ஆதாரத் தூண்களாக விளங்குபவை.

(அ) அடிப்படை அனுமானங்கள்
(ஆ) எதிர்பார்க்கும் நட்டங்கள்
(இ) நிறுவனத் தொடர்ச்சி
(ஈ) கணக்கியல் கருத்துகள்

[விடை. (அ) அடிப்படை அனுமானங்கள்]

(ii) பட்டியல் I–ல் உள்ளவற்றை பட்டியல் II–உடன் பொருத்திப் பார்த்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து உங்கள் விடையை தெரிவு செய்க.

1.

	பட்டியல் I		பட்டியல் II
i.	கணக்கேடுகள் பராமரிப்பு	1.	முறையான அறிவு
ii.	கணக்கியல்	2.	GAAP
iii.	கணக்குப் பதிவியல்	3.	உய்த்துணர்தல்
iv.	கணக்கியல் கோட்பாடுகள்	4.	முதன்மை செயல்முறை

தொகுப்பு:

	(i)	(ii)	(iii)	(iv)
(அ)	1	2	3	4
(ஆ)	4	1	2	3
(இ)	4	3	1	2
(ஈ)	2	3	4	1

[விடை. (இ) (i) - 4 (ii) 3 (iii) - 1 (iv) - 2]

(iii) கீழ்க்கண்ட கோடிட்ட இடத்திற்கு சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.

1. இரட்டைத் தன்மைக் கருத்து _______ க்கு அடிப்படையாக அமைந்துள்ளது.

(அ) குறிப்பேட்டு (ஆ) பேரேட்டு
(இ) ஒற்றைப் பதிவு முறை (ஈ) இரட்டைப் பதிவு முறை

[விடை. (ஈ) இரட்டைப் பதிவு முறை]

2. வணிக நடவடிக்கைகளில் _______ நடவடிக்கைகள் மட்டுமே கணக்கியலில் பதியப்படும்.

(அ) அறிவியல் சார்புடைய
(ஆ) அன்பு சார்புடைய
(இ) நிதிச் சார்புடைய
(ஈ) பொருளியல் சார்புடைய

[விடை. (இ) நிதிச் சார்புடைய]

3. அனைத்து முக்கிய தகவல்களும் நிதிநிலை அறிக்கை மூலமாக வெளிப்படுத்த வேண்டும் என்பதை _____ மரபு வலியுறுத்துகிறது.

(அ) முன்னெச்சரிக்கை மரபு
(ஆ) முழுவெளிப்படுத்துதல் மரபு
(இ) நிலைத்தன்மை மரபு (ஈ) முக்கியத்தன்மை மரபு

[விடை. (ஆ) முழுவெளிப்படுத்துதல் மரபு]

4. இந்திய பட்டய கணக்காளர் நிறுவனக்குழு _____ ஆண்டில் கணக்கியல் தரநிலை வாரியத்தை ஏற்படுத்தி இந்தியாவில் கணக்கியல் தரநிலைகளின் தேவையை வலியுறுத்தியது.

(அ) 21 ஏப்ரல் 1997 (ஆ) 21 ஏப்ரல் 1977
(இ) 21 ஏப்ரல் 1987 (ஈ) 21 ஏப்ரல் 2007

[விடை. (ஆ). 21 ஏப்ரல் 1977]

(iv) கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.

1. (அ) வணிகத் தனித்தன்மை கருத்து
(ஆ) அடக்கவிலைக் கருத்து
(இ) பணமதிப்பீட்டுக் கருத்து
(ஈ) கணக்கியல் தரநிலைகள்

[விடை. (ஈ) கணக்கியல் தரநிலைகள்]

காரணம் :

கணக்கியல் தரநிலைகள் என்பது கணக்கியல் நடவடிக்கைகள் மற்றும் நிகழ்வுகளை அடையாளம் கண்டு, அளவிட்டு பதிவு செய்து, தகவல்களை நிதி அறிக்கை வாயிலாக வெளிப்படுத்தும் ஒரு ஆவணங்களாகும். ஆனால் மற்ற மூன்றும் கணக்கியலின் மரபுகளாகும்.

2. (அ) கணக்கியல்
(ஆ) கணக்கேடுகள் பராமரிப்பு
(இ) இருப்பாய்வு
(ஈ) கணக்குப்பதிவியல் **[விடை. (இ) இருப்பாய்வு]**

காரணம் :

இருப்பாய்வு என்பது ஒரு குறிப்பிட்ட நாளில் அனைத்துப் பேரேட்டுக் கணக்குகளிலும் உள்ள பற்று இருப்புகளையும் வரவு இருப்புகளையும் உள்ளடக்கிய ஓர் அறிக்கை ஆகும், ஆனால் மற்ற மூன்றும் கணக்கியலின் பிரிவுகள் ஆகும்.

(v) கீழ்க்கண்டவற்றுள் எது சரியாக பொருந்தவில்லை?

1.

(அ)	IFRS	-	பன்னாட்டு நிதி அறிக்கை தரநிலைகள்
(ஆ)	IASB	-	பன்னாட்டு கணக்கியல் தரநிலை வாரியம்
(இ)	ASB	-	கணக்கியல் தரநிலை வாரியம்
(ஈ)	ICAI	-	பன்னாட்டு கணக்காளர் நிறுவனம்

[விடை. (ஈ) ICAI - பன்னாட்டு கணக்காளர் நிறுவனம்]

(vi) கீழ்க்கண்ட வாக்கியங்களை கருத்தில் கொள்க.

1. கூற்று (A) : நிதிநிலை அறிக்கைகளை தயார் செய்தல் மற்றும் அந்த அறிக்கைகளை உய்த்துணர்தல் ஆகிய கணக்கியலின் முக்கிய பணிகளுக்கு அடிப்படையாக விளங்குவது கணக்கியல் ஆகும்.

காரணம் (R) : நடவடிக்கைகளைக் கணக்கேடுகளில் மற்றும் பேரேடுகளில் பதிவு செய்யலாம் அல்லது கணினியிலும் பதிவு செய்யலாம்

(அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்.
(ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.
(இ) (A) சரி ஆனால் (R) தவறு
(ஈ) (A) தவறு ஆனால் (R) சரி

[விடை. (ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.]

2. கூற்று (A) : பணமதிப்பீட்டுக் கருத்தின்படி எந்த நடவடிக்கைகளைப் பணத்தால் அளவிட முடியுமோ, அந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்குகளில் பதியப்பட வேண்டும் என்பதைக் குறிக்கிறது.

காரணம் (R) : பணமானது பரிமாற்றத்தின் ஊடகமாக விளங்குவதால், பணத்தால் அளவிடக் கூடிய நடவடிக்கைகள் பதிவு செய்யப்படுகின்றன.

(அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்.
(ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.
(இ) (A) சரி ஆனால் (R) தவறு
(ஈ) (A) தவறு ஆனால் (R) சரி

[விடை. (அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்.]

3. கூற்று (A) : அடக்கவிலையே அனைத்து தொடரும் கணக்கியலுக்கும் அடிப்படையாக அமையும்

காரணம் (R) : ஒருவர் ₹5,00,000 ரொக்கத்துடன் தொழிலை தொடங்கும் போது நிறுவனத்திற்கு ₹5,00,000 சொத்து கிடைக்கும்.

(அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்.
(ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.
(இ) (A) சரி ஆனால் (R) தவறு
(ஈ) (A) தவறு ஆனால் (R) சரி

[விடை. (இ) (A) சரி ஆனால் (R) தவறு]

www.surabooks.com

www.surabooks.com

(vii) சரியான கூற்றைக் கண்டறிக.

1. (I) பன்னாட்டு நிதி அறிக்கை தரநிலைகள் பன்னாட்டு கணக்கியல் தரநிலை வாரியத்தால் வழங்கப்படுவதாகும்.

(II) முன்னெச்சரிக்கை மரபு எச்சரிக்கையாக அல்லது பாதுகாப்பாக செயல்படும் கொள்கையாகும்.

(III) கணக்குகள் நேர்மையாக தயாரிக்கப்பட வேண்டும்.

(அ) I மட்டும் சரி (ஆ) II மட்டும் சரி

(இ) II மற்றும் III சரி (ஈ) I, II, மற்றும் III சரி

[விடை. (ஈ) I, II மற்றும் III சரி]

2. (I) உண்மை ஆதார கருத்து ரொக்க இரசீது, இடாப்பு போன்ற ஆதார ஆவணங்களை உள்ளடக்கியது.

(II) முதல் – பொறுப்புகள் = சொத்துகள்

(III) முதல் + பொறுப்புகள் = சொத்துகள்

(அ) I மட்டும் சரி (ஆ) II மட்டும் சரி

(இ) I மற்றும் III சரி (ஈ) I, II, மற்றும் III சரி

[விடை. (இ) I மற்றும் III சரி]

II. மிகக் குறுகிய வினாக்கள் : 2 மதிப்பெண்கள்

1. கணக்கேடுகள் பராமரிப்பின் பொருள் தருக.

விடை. (1) கணக்கேடுகள் பராமரிப்பு என்பது கணக்கு ஏடுகளில் நிதி நடவடிக்கைகளைப் பதிவு செய்யும் ஒரு செயல்முறை. இதுவே, கணக்கியலின் முதன்மை செயல்முறையாகும்.

(2) இது, நடவடிக்கைகளைப் பதிதல், மற்றும் தலைப்புக்கேற்றவாறு வகைப்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியது.

2. கணக்கியல் என்றால் என்ன? [BEQ]

விடை. (1) கணக்கியல் என்பது கணக்குப்பதிவியலின் ஒரு பகுதியாகும்.

(2) கணக்கியல் என்பது நிதித் தகவல்களை பதிவு செய்தல், வகைப்படுத்துதல், பகுப்பாய்வுசெய்தல் மற்றும் உய்த்துணர்தல் போன்ற செயல்களைக் கொண்டதாகும்.

3. கணக்கியல் தரநிலையின் இலக்கணம் தருக.

விடை. கோஹ்லர் என்பவரின் கூற்றுப்படி, பொதுக் கணக்காளர் மற்றும் கணக்காளர்களின் நலனுக்காக, வழங்கும் சட்டம் மற்றும் தொழில்சார் அமைப்புகளால் பொதுவாக உருவாக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளே கணக்கியல் தரநிலைகளாகும்.

4. பன்னாட்டு நிதிஅறிக்கை தரநிலைகள் குறிப்பு வரைக.

விடை. (1) பன்னாட்டு நிதி அறிக்கை தரநிலைகள் (IFRS) பன்னாட்டு கணக்கியல் தரநிலை வாரியத்தால் (IASB) வழங்கப்படுவதாகும்.

(2) இது பன்னாட்டு தரநிலைகளின் தொகுப்பு. இது குறிப்பிட்ட நடவடிக்கை மற்றும் பிறநிகழ்வுகள் எவ்வாறு நிதிநிலை அறிக்கைகளில், அறிக்கையிடப்பட வேண்டும் என்பதை விளக்குகிறது.

(3) கணக்கியல் தரநிலைகளை உலக அளவில் ஏற்றுக்கொள்ளும் படியும், மற்றும் பன்னாட்டு அளவில் நிதிநிலை அறிக்கைகளை மேம்படுத்தும் வண்ணம் உருவாக்கவும் சர்வதேச நிதி அறிக்கை தரநிலைகள் வெளியிடப்படுகின்றன.

III. குறுகிய வினாக்கள் : 3 மதிப்பெண்கள்

1. கணக்கேடுகள் பராமரிப்பின் நோக்கங்கள் யாவை?

விடை. கணக்கேடுகள் பராமரிப்பின் நோக்கங்கள் பின்வருமாறு :

(i) அனைத்து வணிக நடவடிக்கைகளையும் காலவரிசைப்படி உரிய தலைப்புகளில் பதிவு செய்து முழுமையான மற்றும் நிலையான ஆவணங்களாக வைத்திருத்தல்.

(ii) ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வணிகத்தின் இலாபம் அல்லது நட்டத்தைக் கணக்கிட உதவுதல்.

(iii) நிதி நிலையை அறிய உதவுதல்.

(iv) வணிக வளர்ச்சியை அறிதல்.

(v) செலுத்த வேண்டிய வரியினைக் கண்டறிதல்.

(vi) சட்டத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.

2. கணக்கேடுகள் பராமரிப்பின் குறைபாடுகள் யாவை?

விடை. கணக்கேடுகள் பராமரிப்பு பின்வரும் குறைபாடுகளைக் கொண்டுள்ளது :

(i) இதில், பண மதிப்பிலான நடவடிக்கைகள் மட்டுமே பதியப்படுகின்றன.

(ii) இதில், விலை நிலை மாற்றங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

(iii) இதில், கடந்த கால நிதி விவரங்கள் மட்டுமே பதியப்படுகின்றன.

3. குறிப்பு வரைக : (i) அடக்கவிலைக் கருத்து (ii) தீர்வு கருத்து

விடை. (i) **அடக்கவிலைக் கருத்து :**

(1) வணிகத்தில் ஒரு சொத்தானது புராதன அடக்கவிலையில் அதாவது வாங்கிய விலையில் பதிவு செய்யப்படுகிறது.

(2) அடக்கவிலையே அனைத்து தொடரும் கணக்கியலுக்கும் அடிப்படையாக அமையும்.

(3) இது, சொத்துகள் எப்போதுமே அடக்க விலையில் காண்பிக்கப்படும் என்று பொருளாகாது.

(4) சொத்து வாங்கும் பொழுது அடக்கவிலையில் பதிவு செய்யப்பட்டு முறையாகத் தேய்மானம் புத்தக மதிப்பிலிருந்து கழிக்கப்பட்டு காண்பிக்கப்படுகிறது.

(ii) **தீர்வு கருத்து :**

(1) தீர்வு கருத்தின்படி, ஒரு சொத்தின் மதிப்பில் ஏற்படும் மாற்றம், அச்சொத்துக்கள் வணிகத்தால் தீர்வு செய்யப்படும் போது மட்டுமே பதிவு செய்யப்படும்.

(2) புராதன அடக்க விலையில் சொத்துக்கள் பதிவு செய்தால், சொத்தின் மதிப்பில் ஏற்படும் மாற்றம் அச்சொத்து தீர்வு செய்யும் போது மட்டுமே கணக்கில் கொண்டுவரப்பட வேண்டும்.

❖ ❖ ❖

அலகு
3

முதன்மைப் பதிவேடுகள்

பொருளடக்கம்

3.1 அறிமுகம்

3.2 ஆதார ஆவணங்கள்

3.3 இரட்டைப் பதிவு முறை

3.3.1 வரைவிலக்கணம்

3.3.2 இரட்டைப்பதிவு முறையின் இயல்புகள்

3.3.3 இரட்டைப்பதிவு முறையின் நன்மைகள்

3.4 நடவடிக்கை

3.5 கணக்கு

3.6 நடவடிக்கைகளைப் பதிவு செய்யும் அணுகுமுறைகள்

3.6.1 கணக்கியல் சமன்பாட்டு அணுகுமுறை

3.6.2 பாரம்பரிய அணுகுமுறை

3.7 கணக்கியல் விதிகள்

3.8 குறிப்பேட்டுப் பதிவுகள்

3.8.1 பொருள்

3.8.2 குறிப்பேட்டின் படிவம்

3.8.3 குறிப்பேட்டில் பதிவு செய்யும் படிநிலைகள்

3.8.4 குறிப்பேட்டுப் பதிவின் வகைகள்

3.8.5 இரட்டைப் பதிவுமுறை விதிகளைப் பயன்படுத்துதல்

3.8.6 நடவடிக்கைகளை பகுத்தல்

3.8.7 குறிப்பேட்டின் நன்மைகள்

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

புத்தக வினாக்கள் மற்றும் விடைகள்

சுய ஆய்வு வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும் :

1. கணக்கியல் சமன்பாடு குறிப்பது [BEQ; Mar-'23]

(அ) வியாபாரத்தின் முதல், சொத்திற்கு சமமானது

(ஆ) வியாபாரத்தின் பொறுப்புகள், சொத்திற்கு சமமானது

(இ) வியாபாரத்தின் முதல், பொறுப்புகளுக்கு சமமானது

(ஈ) வியாபாரத்தின் சொத்துகள், முதல் மற்றும் பொறுப்புகளுக்கு சமமானது

[விடை. (ஈ) வியாபாரத்தின் சொத்துகள், முதல் மற்றும் பொறுப்புகளுக்கு சமமானது]

2. சொந்த பயன்பாட்டிற்காக உரிமையாளரால் வணிகத்திலிருந்து எடுக்கப்படும் தொகையால் ஏற்படும் நிலை _______.

(அ) சொத்தின் மதிப்பு குறையும், உரிமையாளரின் முதலின் மதிப்பு குறையும்

(ஆ) ஒரு சொத்தின் மதிப்பு உயரும், மற்றொரு சொத்தின் மதிப்பு குறையும்

(இ) ஒரு சொத்தின் மதிப்பு உயரும், பொறுப்புகளின் மதிப்பு உயரும்

(ஈ) சொத்தின் மதிப்பு உயரும், முதலின் மதிப்பு குறையும்

[விடை. (அ) சொத்தின் மதிப்பு குறையும், உரிமையாளரின் முதலின் மதிப்பு குறையும்]

3. ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள் மதிப்பு ₹ 1,00,000 மற்றும் அதன் வெளியாட்களுடனான பொறுப்புகள் ₹ 60,000 எனில், அந்நிறுவனத்தில் முதல் _______. [BEQ; Mar.-'19; QY.-'23] [HY.-'23]

(அ) ₹ 1,60,000 (ஆ) ₹ 60,000

(இ) ₹ 1,00,000 (ஈ) ₹ 40,000

[விடை. (ஈ) ₹ 40,000]

4. கணக்கியல் சமன்பாட்டின்படி சரியாக இல்லாதது. [Mar-'24]

(அ) சொத்துக்கள் = பொறுப்புகள் + முதல்

(ஆ) சொத்துக்கள் = முதல் + பொறுப்புகள்

(இ) பொறுப்புகள் = சொத்துக்கள் + முதல்

(ஈ) முதல் = சொத்துக்கள் – பொறுப்புகள்

[விடை. (இ) பொறுப்புகள் = சொத்துக்கள் + முதல்]

5. கணக்கியல் சமன்பாடு, எந்த கணக்கியல் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது? [BEQ; First Mid; QY.-'18 & '23; HY. - 2018]

(அ) இரட்டைத் தன்மை (ஆ) நிலைத்தன்மை

(இ) நிறுவனத் தொடர்ச்சி (ஈ) நிகழ்வுத்தன்மை

[விடை. (அ) இரட்டைத் தன்மை]

6. சொத்து கணக்கு கையாள்வது [BEQ; First Mid - 2018; Sep. - 2020; May - 2022]

(அ) தனிப்பட்ட நபர்கள்

(ஆ) செலவுகள் மற்றும் இழப்புகள்

(இ) சொத்துகள்

(ஈ) வருமானம் மற்றும் இலாபங்கள்

[விடை. (இ) சொத்துகள்]

7. பின்வருவனவற்றில் பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு எது? [BEQ; HY. - 2018; QY.-'19 & '23; July-'23]

(அ) கட்டடம் கணக்கு

(ஆ) கொடுபட வேண்டிய சம்பள கணக்கு

(இ) மகேஷ் கணக்கு

(ஈ) பாலன் நிறுவனம்

[விடை. (ஆ) கொடுபட வேண்டிய சம்பள கணக்கு]

8. முன் கூட்டிச் செலுத்திய வாடகை ஒரு [BEQ; First Mid & QY - 2018; HY. - 2019;CRT - 2022]

(அ) பெயரளவு கணக்கு

(ஆ) ஆள்சார் கணக்கு

(இ) சொத்துக் கணக்கு

(ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

[விடை. (ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு]

9. உரிமையாளரால், வணிகத்திலிருந்து எடுக்கப்படும் தொகை வரவு வைக்கப்படும் கணக்கு [Govt. MQP - 2018; CRT - 2022]

(அ) எடுப்புகள் கணக்கு (ஆ) ரொக்கக் கணக்கு

(இ) முதல் கணக்கு (ஈ) கொள்முதல் கணக்கு

[விடை. (ஆ) ரொக்கக் கணக்கு]

10. இரட்டைப் பதிவு முறையில் கணக்குகளைப் பதிவு செய்யும் போது நடவடிக்கைகள் பாதிப்பது [Sep. - 2021; CRT & Aug. - 2022; July-'23]

(அ) குறைந்தபட்சம் இரண்டு கணக்குகள்

(ஆ) ஒரே கணக்கில், வெவ்வேறு தேதிகளில்

(இ) ஒரே கணக்கின் இரு பக்கங்களில்

(ஈ) குறைந்த பட்சம் மூன்று கணக்குகள்

[விடை. (அ) குறைந்தபட்சம் இரண்டு கணக்குகள்]

II. மிகக் குறுகிய வினாக்கள் :

1. ஆதார ஆவணங்கள் என்றால் என்ன? [Sep. - 2021]

விடை. (i) நிதிசார்ந்த நடவடிக்கைகளின் உண்மையான சான்றுகளை வெளிப்படுத்தும் ஆவணங்கள், ஆதார ஆவணங்கள் ஆகும்.

(ii) இந்த ஆவணங்கள் நடவடிக்கைகளின் தன்மை, தேதி, தொகை, தொடர்புடைய நபர்கள் போன்ற விவரங்களை வெளிப்படுத்தும்.

www.surabooks.com

(iii) ரொக்கச்சீட்டு, இடாப்பு, பற்றுக்குறிப்பு, வரவுக்குறிப்பு, செலுத்துச்சீட்டு, சம்பளப்பட்டியல், கூலிப்பட்டியல், காசோலை, பதிவுப்பட்டியல் போன்றவைகள் ஆதார ஆவணங்களில் உள்ளடங்கும்.

2. கணக்கியல் சமன்பாடு என்றால் என்ன?

விடை. நிறுவனத்தின் சொத்துகள் மற்றும் பொறுப்புகள், முதல் ஆகியவற்றிற்கு இடையே உள்ள தொடர்பினை சமன்பாட்டு முறையில் வெளிப்படுத்துவதே கணக்கியல் சமன்பாடு எனப்படும்.

முதல் + பொறுப்புகள் = சொத்துகள்

3. பின்வருவனவற்றிக்கான ஏதேனும் ஒரு நடவடிக்கையைத் தருக. [BEQ]

[அ] சொத்துக்கள் குறைதல் மற்றும் பொறுப்புகள் குறைதல்

[ஆ] ஒரு சொத்து அதிகரித்தல் மற்றும் மற்றொரு சொத்து குறைதல்

விடை. (அ) சொந்த பயனுக்காக உரிமையாளர் ரொக்கம் எடுத்தது.

(ஆ) ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது.

4. குறிப்பேட்டில் பதிவு செய்தல் என்பதன் பொருள் என்ன?

விடை. வணிக நடவடிக்கைகளை பற்று, வரவு என்ற தலைப்பின் கீழ் பகுப்பாய்வு செய்து குறிப்பேட்டில் பதிவுச் செய்வதை குறிப்பேட்டில் பதிவு செய்தல் என்று அழைக்கிறோம்.

5. சொத்து கணக்கு என்றால் என்ன? [CRT-2022]

விடை. புலனாகும் மற்றும் புலனாகச் சொத்துக்கள் சார்ந்த கணக்குகள் மற்றும் உடைமைகள் சார்ந்த கணக்குகள் சொத்து கணக்குகள் எனப்படுகின்றன.

6. ஆள்சார் கணக்குகள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன?

விடை. ஆட்கள் சார்புடைய கணக்குகள் ஆள்சார் கணக்கு எனப்படும். இது தனிநபர், சட்டமுறை அமைப்பு, பிரதிநிதித்துவ அமைப்பு எனப் பிரிக்கப்படுகிறது.

7. பெயரளவு கணக்கிற்கான கணக்கியல் விதியைக் கூறுக. [BEQ; Govt. MQP-2018]

விடை. (i) செலவுகளையும் நட்டங்களையும் பற்று செய் மற்றும் வருமானங்களையும் ஆதாயங்களையும் வரவு செய்'.

(ii) பெயரளவு கணக்குகளின் விதிப்படி, செலவுகளையும், நட்டங்களையும் பற்று செய்ய வேண்டும். வருமானங்களையும், ஆதாயங்களையும் வரவு செய்ய வேண்டும்.

8. இரட்டைப் பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக. [BEQ; First Mid; HY.-'18 & '23; QY.-'18, '19 & '23; HY. & Mar-'19 & '23; Sep. -2020; CRT; May & Aug. - 2022; Mar-'24]

விடை. **கணக்கியலின் பொன்னான விதிகள்**

ஆள்சார் கணக்கு	பெறுபவரை பற்று செய்க	தருபவரை வரவு செய்க
சொத்து கணக்கு	உள்வருவதை பற்று செய்க	வெளிச்செல்வதை வரவு செய்க
பெயரளவு கணக்கு	அனைத்துச் செலவுகளையும் நட்டங்களையும் பற்று செய்க	அனைத்து வருமானங்களையும், ஆதாயங்களையும் வரவு செய்க

III. குறுகிய வினாக்கள் :

1. கணக்கியல் சமன்பாட்டு முறையில் கணக்குகளை பதிவு செய்யும் முறையினை சுருக்கமாக விளக்குக.

விடை. (1) நிறுவனத்தின் சொத்துகள் மற்றும் பொறுப்புகள், முதல் ஆகியவற்றிற்கு இடையே உள்ள தொடர்பினை சமன்பாட்டு முறையில் வெளிப்படுத்துவதே கணக்கியல் சமன்பாடு எனப்படும்.

(2) கணக்கியல் சமன்பாடு =

முதல் + பொறுப்புகள் = சொத்துகள்

(3) கணக்கியல் சமன்பாடு என்பது ஒரு கணிதவியல் வெளிப்பாடாகும். இது மொத்த சொத்துக்களின் மதிப்பும், மொத்த பொறுப்புகள் மற்றும் முதலின் கூட்டுத்தொகையின் மதிப்பும் சமம் என்பதை வெளிப்படுத்துகிறது.

(4) வருவாயும், செலவுகளும் முதலைப் பாதிப்பதால் விரிவாக்கப்பட்ட சமன்பாட்டினை கீழ்கண்டவாறு கொடுக்கலாம்.

சொத்துகள் = பொறுப்புகள் + முதல் + வருவாய் - செலவுகள்

2. கணக்கு என்றால் என்ன? கணக்குகளை வகைப்படுத்தி, தகுந்த உதாரணங்களுடன் கூறுக.

விடை. (1) கணக்கு என்பது கணக்கியலில் அடையாளம் காண உதவும் ஒரு அடிப்படை அலகாகும்.

(2) கணக்கியல் சமன்பாட்டின்படி கணக்குகளை ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன,

(i) சொத்து கணக்கு,
(ii) பொறுப்பு கணக்கு,
(iii) முதல் கணக்கு
(iv) வருவாய் கணக்கு
(v) செலவு கணக்கு

(i) **சொத்து கணக்கு :**

- பணமதிப்புடைய எந்த ஒரு இயற்பொற்பொருளும் அல்லது உரிமையும் சொத்து என அழைக்கப்படும்.
- **உதாரணம் :** நிலம் மற்றும் கட்டடம் கணக்கு, ஆலை, பொறி மற்றும் இயந்திரங்கள் கணக்கு.

(ii) **பொறுப்பு கணக்கு :**

- இதில் நிறுவனத்தின் வெளியாட்கள் சார்ந்த நிதிப்பொறுப்புகள் ஒரு தலைப்பின் கீழ் இடம் பெறுகின்றன.
- **உதாரணம் :** கடனீந்தோர் கணக்கு, செலுத்த வேண்டிய செலவீனங்கள் கணக்கு.

(iii) **முதல் கணக்கு :**

- இதில் நிறுவனத்தின் உரிமையாளர்கள் சார்ந்த நிதிப்பொறுப்புகள் தொகுத்து பதியப்படுகின்றன.
- **உதாரணம் :** உரிமையாளர் இட்ட முதல்.

(iv) **வருவாய் கணக்கு :**

- நிறுவனத்தின் வருவாய் சார்ந்த பதிவுகள் தொகுக்கப்பட்டு, இதில் இடம் பெறுகின்றன.
- **உதாரணம் :** சரக்குகள் விற்பனை, வாடகை பெற்றது.

www.surabooks.com

(v) **செலவு கணக்கு :**

- வருவாய் ஈட்டும் செயல்களின் மூலம் ஏற்படும் செலவுகள் மற்றும் இழப்புகள் இக்கணக்கில் தொகுத்து பதிவுச்செய்யப்படுகின்றன.
- **உதாரணம் :** சரக்குக்கொள்முதல் செய்தது, சம்பளம் வழங்கியது.

3. ஆள்சார் கணக்கின் மூன்று வகைகளைக் கூறுக.

விடை. ஆள்சார் கணக்கு : [BEQ; Govt. MQP & HY. - 2018]

ஆட்கள் சார்புடைய கணக்குகள் ஆள்சார் கணக்கு எனப்படும். இது தனிநபர், சட்டமுறை அமைப்பு, பிரதிநிதித்துவ அமைப்பு எனப் பிரிக்கப்படுகிறது.

(அ) **தனிநபர் கணக்கு :**

- இது மனிதர்கள் சார்ந்த கணக்கு.
- **உதாரணம் :** வினோத் கணக்கு, மாலினி கணக்கு

(ஆ) **சட்டமுறை ஆள்சார் கணக்கு :**

- இது மனிதர்கள் இல்லாத சட்டத்தால் ஏற்கப்படும் செயற்கை நபர்கள் சார்ந்த கணக்கு. இது வணிக நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் போன்றவைகளைக் குறிக்கும்.
- **உதாரணம் :** பி.எச்.இ.எல் கணக்கு, வங்கி கணக்கு.

(இ) **பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு :**

- இது இயற்கை அல்லது செயற்கைத்தன்மையுடைய நபரையோ அல்லது குழுவையோ குறிக்கிறது.
- **உதாரணம் :** கொடுபட வேண்டிய சம்பளக் கணக்கு, முன்கூட்டி செலுத்திய வாடகை கணக்கு.

4. உரிமையாளர் ஆயுள்மீது செலுத்தப்பட்ட காப்பீட்டு முனைமம், கணக்கியலில் எவ்வாறு பதியப்படுகிறது?

விடை. (i) உரிமையாளர் ஆயுள்மீது செலுத்தப்பட்ட காப்பீட்டு முனைமம் கணக்கியலில் எடுப்பாக கருதப்படுகிறது. எனவே எடுப்பு கணக்கு பற்று வைக்கப்படும்.

(ii) ஏனெனில் தனி வணிகத்தில் உரிமையாளரும், நிறுவனமும் தனித்தன்மை ஒன்றாக கருதப்படுகிறது.

எடுப்பு க/கு	ப	xxx	
ரொக்கம் க/கு			xxx
(அ)			
வங்கி க/கு			
(அ)			
கொள்முதல் க/கு			xxx

5. இரட்டைப்பதிவு கணக்கு முறையின் விதிகள் யாவை?

விடை. பின்வருவன இரட்டைப்பதிவு முறையின் இயல்புகளாகும்.

(i) ஒவ்வொரு வணிக நடவடிக்கையும் இரு தன்மைகளைக் கொண்டிருக்கும்.

(ii) இரண்டில், ஒன்று பலனை அல்லது மதிப்பினைப் பெறுவதாகவும், மற்றொன்று பலனை அல்லது மதிப்பினை அளிப்பதாகவும் இருக்கும்.

(iii) இவ்விரு தன்மைகள் குறைந்தது இரு கணக்குகள், அதாவது குறைந்தபட்சம் ஒரு பற்று, குறைந்தபட்சம் ஒரு வரவு என சம்பந்தப்பட்டிருக்கும்.

(iv) ஒவ்வொரு பற்றும் அதற்குத் தகுந்த சமமான வரவினையும் ஒவ்வொரு வரவும் அதற்குத் தகுந்த சமமான பற்றினையும் பெற்றிருக்கும். ஒரு கணக்கு பற்று செய்யப்பட்டால், மற்றொரு கணக்கு வரவு வைக்கப்பட வேண்டும்.

6. குறிப்பேட்டில் பதிவு செய்யும் படிநிலைகளை விவரி.

விடை. குறிப்பேட்டில் பதிவு செய்வதற்கு பின்வரும் படிநிலைகள் பின்பற்றப்படுகின்றன :

(1) நடவடிக்கைகளை ஆய்வு செய்து அதிலுள்ள கணக்குகளை (தன்மையின் அடிப்படையில்) அடையாளம் காண வேண்டும்.

(2) மேலே அடையாளம் கண்ட கணக்குகளை ஆள்சார்கணக்கு, சொத்துகணக்கு அல்லது பெயரளவு கணக்கு என்று பாகுபடுத்த வேண்டும்.

(3) மேலே பாகுபடுத்தப்பட்ட (ஒரு நடவடிக்கைக்கு தேவையான) இரண்டு கணக்குகளுக்கும் பற்று, வரவு விதிகளைப் பொருத்திப் பார்க்க வேண்டும்.

(4) இரட்டைப்பதிவு முறையின் விதிகளைப் பயன்படுத்தி எந்த கணக்கினைப் பற்று வைக்க வேண்டும், எந்த கணக்கினை வரவு வைக்க வேண்டும் என கண்டறிய வேண்டும்.

(5) நடவடிக்கை நடந்த நாளினை, நாள் பத்தியில் பதிவு செய்திட வேண்டும்.

(6) பற்று வைக்க வேண்டிய கணக்கின் பெயரை விவரப் பத்தியின் இடது பக்கத்தில் மிகவும் நெருக்கமாக எழுத ஆரம்பித்து, அந்த வரியின் இறுதியில் 'ப' என்று பதிவு செய்ய வேண்டும்.

(7) வரவு வைக்க வேண்டிய கணக்கின் பெயரை இரண்டாவது வரியில் பக்க ஓரத்திலிருந்து சிறிது இடைவெளி விட்டு, விவரப் பத்தியில் எழுத வேண்டும்.

(8) அடுத்த வரியில் விவரப் பத்தியில் சிறு விளக்கத்தினை பிறை அடைப்பில் கொடுக்க வேண்டும்.

7. இரட்டைப்பதிவு முறை என்றால் என்ன? அதன் நன்மைகளை எழுதுக. [Sep. -2021]

விடை. இரட்டைப் பதிவு முறையிலான கணக்குகேடுகள் பராமரிப்பு என்பது ஒரு நிறுவனத்தின் நிதி சார்ந்த அனைத்துப் பதிவுகளையும் அறிவியல் பூர்வமாக முழுமையாக பதிவு செய்யும் முறையாகும். இம்முறையின்படி, ஒவ்வொரு நடவடிக்கையும் இரண்டு தன்மைகளை தன்னகத்தே கொண்டுள்ளன. அவை முறையே, பெறும் தன்மை மற்றும் செலுத்தும் தன்மை ஆகும்.

இரட்டைப்பதிவு முறையின் நன்மைகள் :

(i) **துல்லியத்தன்மை :**

(1) இரட்டைத் தன்மை முறையில் வணிகத்தின் அனைத்து நடவடிக்கைகளும், இரு தன்மைகளோடு கணக்கேடுகளில் பதிவு செய்யப்படுகின்றன.

(2) இது கணக்கியலின் துல்லியத்தன்மையை பரிசோதிக்க உதவுகிறது.

(ii) **வணிக முடிவுகளை உறுதிப்படுத்துதல் :**

(1) வணிகத்தில் ஏற்படும் செலவுகள், இழப்புகள் வருமானங்கள், இலாபங்கள், சொத்துகள், பொறுப்புகள், கடனாளிகள், கடனீந்தோர்கள் போன்ற விபரங்களை உடனுக்குடன் பெற முடியும்.

(2) இதன் உதவியால் ஒரு குறிப்பிட்ட கணக்காண்டின் நிகர இலாபம் அல்லது நிகர நட்டம் மற்றும் ஒரு குறிப்பிட்ட தேதியில் நிதிநிலையினைக் கணக்கிட முடியும்.

www.surabooks.com

(iii) **ஒப்பீட்டு ஆய்வு :**

(1) வணிக நிறுவனத்தின் தற்கால முடிவுகளை, முந்தைய ஆண்டுகளின் முடிவுகளோடும், மேலும், வேறு பல நிறுவனங்களின் முடிவுகளோடும் ஒப்பிட்டு பார்க்க முடியும்.

(2) இதன் மூலம் வணிகத்தின் எதிர்காலத் திட்டங்களை வகுக்க முடியும்.

(iv) **பொதுவான ஏற்புத்தன்மை :**

(1) இம்முறையில் கணக்கினைப் பதிவு செய்வதை நிதி நிறுவனங்கள், அரசு அதிகாரிகள் மற்றும் பலரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

(2) ஏனெனில், இது ஒரு முறையான, அறிவியல் பூர்வமான கணக்கு பராமரிப்பு முறையாகும்.

IV. பயிற்சி கணக்குகள் :

1. கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக [Govt. MQP-2018; Mar-2019; July-'23]

[அ] சொத்துகள்	=	**முதல்**	+	**பொறுப்புகள்**
₹ 1,00,000	=	**₹ 80,000**	+	**?**
[ஆ] சொத்துகள்	=	**முதல்**	+	**பொறுப்புகள்**
₹ 2,00,000	=	**?**	+	**₹ 40,000**
[இ] சொத்துகள்	=	**முதல்**	+	**பொறுப்புகள்**
?	=	**₹ 1, 60,000**	+	**₹ 80,000**

தீர்வு :

(அ) சொத்துகள்	=	முதல்	+	பொறுப்புகள்
₹ 1,00,000	=	₹ 80,000	+	₹ 20,000
(ஆ) சொத்துகள்	=	முதல்	+	பொறுப்புகள்
₹ 2,00,000	=	₹ 1,60,000	+	₹ 40,000
(இ) சொத்துகள்	=	முதல்	+	பொறுப்புகள்
₹ 2,40,000	=	₹ 1, 60,000	+	₹ 80,000

2. பின்வரும் நடவடிக்கைகளின் கணக்கியல் சமன்பாட்டு விளைவுகளை பதிவிட்டு காட்டுக. [BEQ; QY. - 2018; HY-2018]

[அ] இராஜ் ₹40,000 ரொக்கத்துடன் வணிகத்தைத் தொடங்கினார்.

[ஆ] ₹30,000 வைப்புத் தொகையுடன் வங்கியில் கணக்கினை ஆரம்பித்தார்.

[இ] ஹரி என்பவரிடமிருந்து ₹12,000க்கு கடனுக்கு சரக்கு வாங்கப்பட்டது.

[ஈ] இராஜ் தமது சொந்த பயன்பாட்டிற்காக ₹1,000 எடுத்துக்கொண்டார்.

[உ] பற்று அட்டையினைப் பயன்படுத்தி ₹10,000-க்கு அறைகலன்கள் வாங்கப்பட்டது.

[ஊ] முருகன் என்பவருக்கு சரக்கு விற்பனை செய்யப்பட்டு, ₹6,000 பெறப்பட்டது.

[எ] அலுவலகத் தேவைக்காக வங்கியிலிருந்து பணம் எடுக்கப்பட்டது ₹1,000.

தீர்வு :

வ. எண்.	நடவடிக்கை	ரொக்கம் ₹	வங்கி ₹	சரக்கிருப்பு ₹	அறைகலன்கள் ₹	மொத்த சொத்துக்கள் ₹	=	மொத்த பொறுப்புகள் ₹	முதல் ₹	கடனீந்தோர் ₹
அ)	ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது	+40,000							+40,000	
	இருப்புகள் **சமன்பாடு**	+40,000				+40,000	=	+40,000	+40,000	
ஆ)	வங்கியில் செலுத்திய ரொக்கம்	–30,000	+30,000							
	இருப்புகள் **சமன்பாடு**	+10,000	+30,000			+40,000	=	+40,000	+40,000	
இ)	கடனுக்கு சரக்கு வாங்கியது			+12,000						+12,000
	இருப்புகள் **சமன்பாடு**	+10,000	+30,000	+12,000	–	+52,000	=	+52,000	+40,000	+12,000
ஈ)	சொந்த பயனுக்கு ரொக்கம் எடுத்தது	–1,000	–	–	–				–1,000	
	இருப்புகள் **சமன்பாடு**	+9,000	+30,000	+12,000		+51,000	=	+51,000	+39,000	+12,000

www.surabooks.com

வ. எண்.	நடவடிக்கை	ரொக்கம் ₹	வங்கி ₹	சரக்கிருப்பு ₹	அறைகலன்கள் ₹	மொத்த சொத்துக்கள் ₹	=	மொத்த பொறுப்புகள் ₹	முதல் ₹	கடனீந்தோர் ₹
உ)	பற்று அட்டையைப் பயன்படுத்தி அறைகலன் வாங்கியது		−10,000		+10,000					
	இருப்புகள்	+ 9,000	+20,000	+12,000	+10,000				+39,000	+12,000
	சமன்பாடு					**+51,000**	=	**+51,000**		
ஊ)	ரொக்கத்திற்கு சரக்கு விற்றது	+6,000		−6,000						
	இருப்புகள்	+15,000	+20,000	+6,000	+10,000				+39,000	+12,000
	சமன்பாடு					**+51,000**	=	**+51,000**		
எ)	அலுவலகச் செலவுக்காக ரொக்கம் எடுத்தது	+1,000	−1,000							
	இருப்புகள்	+16,000	+19,000	+6,000	+10,000				+39,000	+12,000
	சமன்பாடு					**+51,000**	=	**+51,000**		

3. பின்வரும் நடவடிக்கைகளின் கணக்கியல் சமன்பாட்டினை தயார் செய்க.[BEQ; Govt. MQP & QY.-2018 & '23; Sep. -2020; Mar–'24]

[அ] முருகன் ₹80,000 பணத்துடன் தொழிலைத் தொடங்கினார்.

[ஆ] ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹30,000.

[இ] ரொக்கமாக வழங்கிய சம்பளம் ₹5,000.

[ஈ] குமாரிடமிருந்து சரக்கு வாங்கியதற்கு, பணம் வைப்பு இயந்திரம் மூலமாக செலுத்தப்பட்டது ₹5,000.

[உ] கூடுதல் முதல் இட்டது ₹10,000.

தீர்வு :

வ. எண்.	நடவடிக்கை	ரொக்கம் ₹	சரக்கிருப்பு ₹	மொத்த சொத்துகள் ₹	=	மொத்த பொறுப்புகள் ₹	முதல் ₹
அ)	ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது	+80,000					+80,000
	இருப்புகள்	+80,000					+80,000
	சமன்பாடு			**+80,000**	=	**+80,000**	
ஆ)	ரொக்க கொள்முதல்	−30,000	+30,000				
	இருப்புகள்	+50,000	+30,000				+80,000
	சமன்பாடு			**+80,000**	=	**+80,000**	
இ)	சம்பளம் ரொக்கமாக வழங்கியது	−5,000					−5,000
	இருப்புகள்	+45,000	+30,000				+75,000
	சமன்பாடு			**+75,000**	=	**+75,000**	
ஈ)	இயந்திரம் மூலமாக பணம் செலுத்தப்பட்டது	−5,000	+5,000				
	இருப்புகள்	+40,000	+35,000				+75,000
	சமன்பாடு			**+75,000**	=	**+75,000**	
உ)	கூடுதல் முதல் இட்டது	+10,000					+10,000
	இருப்புகள்	+50,000	+35,000				+85,000
	சமன்பாடு			**+85,000**	=	**+85,000**	

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com

4. பின்வருவனவற்றிற்கான கணக்கியல் சமன்பாட்டு விளைவுகள் என்ன?

(அ) சுனில், ₹1,40,000 ரொக்கம் மற்றும் ₹60,000 மதிப்புள்ள சரக்குடன் வியாபாரத்தைத் தொடங்கினார்.

(ஆ) ₹20,000 மதிப்புள்ள அறைகலன்களை ரொக்கத்திற்கு வாங்கினார்.

(இ) அறைகலன் மீது தேய்மானம் ₹800.

(ஈ) வங்கியில் செலுத்தியது ₹40,000.

(உ) இணைய வங்கி மூலமாக மின்கட்டணம் ₹500 செலுத்தப்பட்டது.

(ஊ) ₹10,000 மதிப்புள்ள சரக்குகள் ₹15,000க்கு இரவியிடம் விற்கப்பட்டது.

(எ) இரவியிடம் இருந்து திரும்பிய சரக்கின் மதிப்பு ₹7,500 (அடக்கவிலை ₹5,000).

தீர்வு :

வ. எண்	நடவடிக்கை	ரொக்கம் ₹	சரக்கிருப்பு ₹	வங்கி ₹	அறைகலன் ₹	கடனாளிகள் ₹	மொத்த சொத்துகள் ₹	=	மொத்த பொறுப்புகள் ₹	முதல் ₹
அ)	ரொக்க மற்றும் சரக்குடன் தொழில் தொடங்கப்பட்டது	+1,40,000	+60,000							+2,00,000
	இருப்புகள்	+1,40,000	+60,000							+2,00,000
	சமன்பாடு						**+2,00,000**	=	**+2,00,000**	
ஆ)	ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது	–20,000			+ 20,000					
	இருப்புகள்	+1,20,000	+60,000		+ 20,000					+2,00,000
	சமன்பாடு						**+2,00,000**	=	**+2,00,000**	
இ)	அறைகலன் மீது தேய்மானம்				–800					–800
	இருப்புகள்	+1,20,000	+60,000		+19,200					+1,99,200
	சமன்பாடு						**+1,99,200**	=	**+1,99,200**	
ஈ)	ரொக்கம் வங்கியில் செலுத்தியது	– 40,000		+ 40,000						
	இருப்புகள்	+ 80,000	+60,000	+ 40,000	+19,200					+1,99,200
	சமன்பாடு						**+1,99,200**	=	**+1,99,200**	
உ)	இணைய வங்கி மூலம் மின்கட்டணம் செலுத்தியது			–500						–500
	இருப்புகள்	+ 80,000	+60,000	+ 39,500	+19,200					+1,98,700
	சமன்பாடு						**+1,98,700**	=	**+1,98,700**	
ஊ)	கடனுக்கு சரக்கு விற்றது		–10,000			+15,000				+ 5,000
	இருப்புகள்	+ 80,000	+50,000	+39,500	+19,200	+15,000				+2,03,700
	சமன்பாடு						**+2,03,700**	=	**+2,03,700**	
எ)	திருப்பிய சரக்கு		+7,500			–5,000				+ 2,500
	இருப்புகள்	+ 80,000	+57,500	+39,500	+19,200	+10,000				+2,06,200
	சமன்பாடு						**+2,06,200**	=	**+2,06,200**	

www.surabooks.com

5. பின்வரும் நடவடிக்கைகளுக்கு கணக்கியல் சமன்பாட்டினை உருவாக்குக. **[BEQ; First Mid - 2018]**

(i) இராகேஷ் ₹1,50,000 முதலுடன் தொழில் தொடங்கினார்.
(ii) வங்கியில் இட்ட தொகை ₹80,000.
(iii) மகேஷிடமிருந்து எடுப்பு அட்டை மூலம் சரக்கு வாங்கியது ₹25,000.
(iv) 10,000 மதிப்புள்ள சரக்குகள் ₹14,000க்கு மோகனிடம் விற்பனை செய்யப்பட்டது. இத்தொகையினை அவர் எடுப்பு அட்டை மூலம் செலுத்தினார்.
(v) காசோலை மூலம் பெறப்பட்ட கழிவு ₹2,000 உடனடியாக வங்கியில் வசூலிப்பதற்காக செலுத்தப்பட்டது.
(vi) அலுவலக வாடகை மின்னணு பரிவர்த்தனைமூலம் செலுத்தியது ₹6,000.
(vii) இராமனுக்கு விற்ற சரக்கின் மதிப்பு ₹15,000-ல், ₹5,000 உடனடியாக பணமாகப் பெறப்பட்டது.

தீர்வு :

வ. எண்.	நடவடிக்கை	ரொக்கம் ₹	வங்கி ₹	சரக்கிருப்பு ₹	கடனாளர்கள் ₹	மொத்த சொத்துகள் ₹	=	மொத்த பொறுப்புகள் ₹	முதல் ₹
(i)	ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது	+1,50,000							+1,50,000
	இருப்புகள் **சமன்பாடு**	+1,50,000				**+1,50,000**	=	**+1,50,000**	+1,50,000
ii)	ரொக்கம் வங்கியில் செலுத்தியது	–80,000	+80,000						
	இருப்புகள் **சமன்பாடு**	+70,000	+80,000			**+1,50,000**	=	**+1,50,000**	+1,50,000
iii)	எடுப்பு அட்டை மூலம் சரக்கு வாங்கியது		–25,000	+25,000					
	இருப்புகள் **சமன்பாடு**	+70,000	+55,000	+25,000		**+1,50,000**	=	**+1,50,000**	+1,50,000
iv)	கடன் விற்பனை		+14,000	–10,000					+ 4,000
	இருப்புகள் **சமன்பாடு**	+70,000	+69,000	+15,000		**+1,54,000**	=	**+1,54,000**	+1,54,000
v)	காசோலை மூலம் பெறப்பட்ட கழிவு		+2,000						+2,000
	இருப்புகள் **சமன்பாடு**	+70,000	+71,000	15,000		**+1,56,000**	=	**+1,56,000**	+1,56,000
vi)	அலுவலக வாடகை மின்னனு பரிவர்த்தனை மூலம் செலுத்தியது		–6,000						– 6,000
	இருப்புகள் **சமன்பாடு**	+70,000	+65,000	15,000		**+1,50,000**	=	**+1,50,000**	+1,50,000
vii)	ரொக்க விற்பனை	+5,000		–15,000	+ 10,000				
	இருப்புகள் **சமன்பாடு**	+75,000	+65,000	0	+10,000	**+1,50,000**	=	**+1,50,000**	+1,50,000

www.surabooks.com

6. பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு கணக்கியல் சமன்பாட்டினை உருவாக்கவும். **[BEQ; First Mid - 2018]**

(i) **ரொக்கம் ₹80,000 மற்றும் சரக்குகள் ₹75,000 கொண்டு வியாபாரம் தொடங்கப்பட்டது.**

(ii) **சண்முகத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹50,000.**

(iii) **சண்முகத்திடமிருந்து ₹49,000 பெற்றுக் கொண்டு அவரது கணக்குத் தீர்க்கப்பட்டது.**

(iv) **கொடுபட வேண்டிய சம்பளம் ₹3,000.**

(v) **₹1,000 மதிப்புள்ள சரக்குகள் தொண்டு நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டது.**

(vi) **காப்பீட்டு முனைமம் செலுத்தியது ₹3,000.**

(vii) **முன்கூட்டிச் செலுத்திய காப்பீட்டு முனைமம் ₹500.**

தீர்வு :

வ. எண்	நடவடிக்கை	ரொக்கம் ₹	சரக்கிருப்பு ₹	முன்கூட்டி செலுத்திய செலவுகள் ₹	கடனாளர்கள் ₹	மொத்த சொத்துகள் ₹	=	மொத்த பொறுப்புகள் ₹	முதல் ₹	கடனீந்தோர் ₹
i)	ரொக்கம் மற்றும் சரக்கு கொண்டு தொழில் தொடங்கியது	+80,000	+75,000						+1,55,000	
	இருப்புகள்	+80,000	+75,000						+1,55,000	
	சமன்பாடு					**+1,55,000**	=	**+1,55,000**		
ii)	கடன் விற்பனை		–50,000		+50,000					
	இருப்புகள்	+80,000	+25,000		+50,000				+1,55,000	
	சமன்பாடு					**+1,55,000**	=	**+1,55,000**		
iii)	சண்முகத்திடம் இருந்து பெற்ற ரொக்கம்	+49,000			–50,000				–1,000	
	இருப்புகள்	+1,29,000	+25,000		0				+1,54,000	
	சமன்பாடு					**+1,54,000**	=	**+1,54,000**		
iv)	கொடுபட வேண்டிய சம்பளம்								– 3,000	+3,000
	இருப்புகள்	+1,29,000	+25,000		0				1,51,000	+3,000
	சமன்பாடு					**+1,54,000**	=	**+1,54,000**		
v)	சரக்குகள் தொண்டு நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டது		–1,000						–1,000	
	இருப்புகள்	+1,29,000	+24,000						+1,50,000	+3,000
	சமன்பாடு					**+1,53,000**	=	**+1,53,000**		
vi)	காப்பீட்டு முனைமம் செலுத்தியது	–3,000							–3,000	
	இருப்புகள்	+1,26,000	+24,000						+1,47,000	+3,000
	சமன்பாடு					**+1,50,000**	=	**+1,50,000**		
vii)	முன்கூட்டி செலுத்திய காப்பீட்டு முனைமம்			+500					+500	
	இருப்புகள்	+1,26,000	+24,000	+500					+1,47,500	+3,000
	சமன்பாடு					**+1,50,500**	=	**+1,50,500**		

www.surabooks.com

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com

7. பின்வரும் நடவடிக்கைகளை ஜவுளி வியாபாரம் செய்யும் மனோகர் அவர்களின் குறிப்பேடுகளில் பதிவு செய்க

[BEQ; First Mid & QY. - 2018; QY. - 2019]

2018 மார்ச்		₹
1	மனோகர் வியாபாரம் தொடங்க கொண்டு வந்த ரொக்கம்	60,000
2	ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது	10,000
3	ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது	25,000
6	கமலேசிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது	15,000
8	ரொக்கத்திற்கு சரக்கு விற்பனை செய்தது	28,000
10	ஹரிக்கு கடனுக்கு சரக்கு விற்பனை செய்தது	10,000
14	கமலேசிற்கு செலுத்திய ரொக்கம்	12,000
18	வாடகை செலுத்தியது	500
25	ஹரியிடமிருந்து பெற்ற ரொக்கம்	8,000
28	சொந்தப் பயன்பாட்டிற்காக பணம் எடுத்தது	4,000

தீர்வு :

மனோகர் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்	பே. ப. எண்	பற்று ₹	வரவு ₹
2018 மார்ச் 1	ரொக்க க/கு ப மனோகர் முதல் க/கு (மனோகர் ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது)		60,000	60,000
2	அறைகலன் க/கு ப ரொக்கக் க/கு (ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது)		10,000	10,000
3	கொள்முதல் க/கு ப ரொக்கக் க/கு (ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது)		25,000	25,000
6	கொள்முதல் க/கு ப கமலேசு க/கு (கடனுக்கு கொள்முதல் செய்தது)		15,000	15,000
8	ரொக்க க/கு ப விற்பனை க/கு (ரொக்கத்திற்கு விற்பனை செய்தது)		28,000	28,000
10	ஹரி க/கு ப விற்பனை க/கு (கடனுக்கு விற்பனை செய்தது)		10,000	10,000
14	கமலேசு க/கு ப ரொக்க க/கு (கமலேசுக்கு செலுத்தியது)		12,000	12,000
18	வாடகை க/கு ப ரொக்கக் க/கு (வாடகை செலுத்தியது)		500	500
25	ரொக்க க/கு ப ஹரி க/கு (ஹரியிடமிருந்து ரொக்கம் பெற்றது)		8,000	8,000
28	எடுப்புகள் க/கு ப ரொக்கக் க/கு (சொந்தப்பயனுக்கு ரொக்கம் எடுத்தது)		4,000	4,000

8. வாகன உதிரி பாகங்கள் விற்பனை செய்யும் சசிகுமாரின் ஏடுகளில் பின்வரும் நடவடிக்கைகளுக்கு குறிப்பேட்டு பதிவு தருக. [Mar-'24]

2017 அக்.		₹
1	வியாபாரம் தொடங்குவதற்காக இட்ட சரக்கின் மதிப்பு	40,000
3	வணிகத்தில் இட்ட ரொக்கத்தின் மதிப்பு	60,000
4	அருளிடமிருந்து கடனுக்கு வாங்கிய சரக்கின் மதிப்பு	70,000
6	அருளிற்கு திருப்பிய சரக்கின் மதிப்பு	10,000
10	அருளின் கணக்கில் செலுத்திய தொகை	60,000
15	சந்தருக்கு கடனுக்கு விற்ற சரக்கின் மதிப்பு	30,000
18	சந்தர் திருப்பி அனுப்பிய சரக்கின் மதிப்பு	6,000
20	சந்தரிடமிருந்து ரொக்கம் ₹23,000 பெற்றுக்கொண்டு அவரது கணக்கு முடிக்கப்பட்டது	
25	மின்னனு பரிவர்த்தனை மூலம் சம்பளம் வழங்கியது	2,000
30	சசிகுமார் தமது சொந்த பயன்பாட்டிற்காக எடுத்துக் கொண்ட சரக்கின் மதிப்பு	10,000

தீர்வு :

சசிகுமார் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்	பே. ப. எண்	பற்று ₹	வரவு ₹
2017 அக் 1	சரக்கிருப்பு க/கு ப சசிகுமார் முதல் க/கு (வியாபாரம் தொடங்குவதற்காக இட்ட சரக்கு)		40,000	40,000
3	ரொக்க க/கு ப முதல் க/கு (ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது)		60,000	60,000
4	கொள்முதல் க/கு ப அருள் க/கு (கடனுக்கு கொள்முதல் செய்தது)		70,000	70,000

www.surabooks.com

நாள்	விவரம்		பே. ப. எண்	பற்று ₹	வரவு ₹
6	அருள் க/கு கொள்முதல் திருப்பம் க/கு (அருளிற்கு சரக்கு திருப்பி அனுப்பியது)	ப		10,000	10,000
10	அருள் க/கு ரொக்க க/கு (அருளுக்கு செலுத்தியது)	ப		60,000	60,000
15	சந்தர் க/கு விற்பனை க/கு (கடனுக்கு விற்பனை செய்தது)	ப		30,000	30,000
18	விற்பனை திருப்பம் க/கு சந்தர் க/கு (சந்தர் சரக்கு திருப்பி அனுப்பியது)	ப		6,000	6,000
20	ரொக்க க/கு அளித்த தள்ளுபடி க/கு சந்தர் க/கு (ரொக்கம் பெற்றுக் கொண்டு தள்ளுபடி அளித்தது)	ப ப		23,000 1,000	24,000
25	சம்பளம் க/கு வங்கி க/கு (சம்பளம் வழங்கியது)	ப		2,000	2,000
30	எடுப்புகள் க/கு கொள்முதல் க/கு (சொந்த பயன்பாட்டிற்காக சரக்கு எடுத்தது)	ப		10,000	10,000

9. **கணினி வியாபாரம் செய்யும் இரமேஷின் குறிப்பேட்டில் பின்வரும் நடவடிக்கைகளைப் பதிவு செய்க.** [BEQ; QY.'23]

2018
மார்ச்

1	**இரமேஷ், ரொக்கம் ₹3,00,000 சரக்கிருப்பு ₹80,000 மற்றும் அறைகலன் ₹27,000 ஆகியவற்றுடன் தொழில் தொடங்கினார்.**
2	**வங்கியில் பணம் செலுத்தியது ₹2,00,000.**
3	**ஜெயலெட்சுமி அறைகலன் விற்பனையகத்திடம் இருந்து ₹28,000 மதிப்புள்ள அறைகலன்கள் கடனுக்கு வாங்கப்பட்டது.**
4	**அசோகனிடமிருந்து ₹5,000 மதிப்புள்ள சரக்குகள் எடுப்பு அட்டை மூலமாக பணம் செலுத்தி வாங்கப்பட்டது.**
5	**குணாவிடமிருந்து ₹10,000 மதிப்புள்ள பொருட்கள் இணைய வங்கி மூலம் பணம் செலுத்தி வாங்கப்பட்டது.**
6	**கண்ணனிடமிருந்து ₹20,000 க்கான சரக்குகள் வாங்கப்பட்டு, அதற்கான தொகை கடன் அட்டை மூலம் செலுத்தப்பட்டது.**
7	**சியாம் என்பவரிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ₹50,000**
8	**சியாம் எழுதிய மாற்றுச்சீட்டு ஏற்கப்பட்டது ₹50,000**
9	**ஜெயலெட்சுமி அறைகலன் விற்பனையகத்திற்கு செலுத்த வேண்டிய தொகையை பாதி காசோலை மூலம் செலுத்தப்பட்டது.**
10	**சியாமின் மாற்றுச்சீட்டிற்கான பணம் செலுத்தப்பட்டது.**

தீர்வு :

இரமேஷின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்		பே. ப. எண்	பற்று ₹	வரவு ₹
2018 மார்ச் 1	ரொக்கக் க/கு சரக்கிருப்பு க/கு அறைகலன் க/கு இரமேஷ் முதல் க/கு (இரமேஷ் தொழில் தொடங்கியது)	ப ப ப		3,00,000 80,000 27,000	4,07,000
2	வங்கி க/கு ரொக்கக் க/கு (வங்கியில் பணம் செலுத்தியது)	ப		2,00,000	2,00,000
3	அறைகலன் க/கு ஜெயலட்சுமி க/கு (அறைகலன் கடனுக்கு வாங்கியது)	ப		28,000	28,000
4	கொள்முதல் க/கு வங்கி க/கு (எடுப்பு அட்டை மூலம் கொள்முதல் செய்தது)	ப		5,000	5,000
5	கொள்முதல் க/கு வங்கி க/கு (இணைய வங்கி மூலம் கொள்முதல் செய்தது)	ப		10,000	10,000
6	கொள்முதல் க/கு வங்கி க/கு (கடன் அட்டை மூலம் கொள்முதல் செய்தது)	ப		20,000	20,000
7	கொள்முதல் க/கு சியாம் க/கு (கடனுக்கு கொள்முதல் செய்தது)	ப		50,000	50,000
8	சியாம் க/கு செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு க/கு (சியாம் எழுதிய மாற்றுச் சீட்டு ஏற்கப்பட்டது)	ப		50,000	50,000
9	ஜெயலட்சுமி அறைகலன் க/கு வங்கி க/கு (ஜெயலட்சுமி அறைகலன் விற்பனையகத்திற்கு செலுத்த வேண்டிய தொகையை காசோலை மூலம் செலுத்தப்பட்டது)	ப		14,000	14,000

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com

நாள்	விவரம்	பே. ப. எண்	பற்று ₹	வரவு ₹
10	செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு க/கு ப ரொக்கக் க/கு (மாற்றுச் சீட்டிற்கான பணம் செலுத்தப்பட்டது)		50,000	50,000

10. **பின்வரும் நடவடிக்கைகளை இராஜா ஹோட்டலின் குறிப்பேடுகளில் பதிவு செய்க.**
[BEQ; QY. - 2018; Sep. - 2020; HY.-'23]

ஜனவரி		₹
1	**ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது**	**3,00,000**
2	**ராஜுவிடமிருந்து கடன் கொள்முதல் செய்தது**	**1,00,000**
3	**வங்கியில் ரொக்கம் செலுத்தியது**	**2,00,000**
20	**வங்கியில் கடன் பெற்றது**	**1,00,000**
22	**சொந்த உபயோகத்திற்காக வங்கியிலிருந்து பணம் எடுத்தது**	**800**
23	**ராஜுவிற்கு தேசிய மின்னனு பணப்பரிமாற்றம் மூலமாக ரொக்கம் செலுத்தி கணக்கு தீர்க்கப்பட்டது**	**99,000**
25	**உரிமையாளரின் சங்க உறுப்பினர் சந்தா காசோலை மூலம் செலுத்தியது**	**200**
26	**உரிமையாளரின் வீட்டிற்கான மின் கட்டணம் எடுப்பு அட்டை மூலம் செலுத்தியது**	**2,000**
31	**அறக்கட்டளை அமைப்பிற்கு மதிய உணவு இலவசமாக வழங்கியது**	**1,000**
31	**வங்கி வசூலித்த பாதுகாப்பு பெட்டக வாடகை**	**1,000**

தீர்வு :

இராஜா ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்	பே. ப. எண்	பற்று ₹	வரவு ₹
ஜனவரி 1	ரொக்கக் க/கு ப இராஜா முதல் க/கு (ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது)		3,00,000	3,00,000
2	கொள்முதல் க/கு ப ராஜீவ் க/கு (கடனுக்கு கொள்முதல் செய்தது)		1,00,000	1,00,000
3	வங்கி க/கு ப ரொக்கக் க/கு (வங்கியில் ரொக்கம் செலுத்தியது)		2,00,000	2,00,000
20	ரொக்கக் க/கு ப வங்கிக் கடன் க/கு (வங்கியில் கடன் பெற்றது)		1,00,000	1,00,000
22	எடுப்புகள் க/கு ப வங்கி க/கு (சொந்த உபயோகத்திற்காக வங்கியிலிருந்து பணம் எடுத்தது)		800	800
23	ராஜீவ் க/கு ப வங்கி க/கு பெற்ற தள்ளுபடி க/கு (ராஜீவ் கணக்கு தீர்க்கப்பட்டது)		1,00,000	99,000 1,000
25	எடுப்புகள் க/கு ப வங்கி க/கு (உரிமையாளரின் சந்தா காசோலை மூலம் செலுத்தியது)		200	200
26	எடுப்புகள் க/கு ப வங்கி க/கு (மின் கட்டணம் எடுப்பு அட்டை மூலம் செலுத்தியது)		2,000	2,000
31	அறக்கட்டளை க/கு ப கொள்முதல் க/கு (உணவு இலவசமாக அறக்கட்டளை அமைப்பிற்கு வழங்கியது)		1,000	1,000
31	பெட்டக வாடகை க/கு ப வங்கி க/கு (பெட்டக வாடகை செலுத்தியது)		1,000	1,000

11. **ஷியாம் எனும் எழுதுபொருள் வியாபாரியின் குறிப்பேட்டில் 2017 ஆகஸ்ட் மாதத்திற்குரிய நடவடிக்கைகளை பதிவு செய்க.**

ஆகஸ்டு

1 **ரொக்கம் ₹4,00,000 மற்றும் சரக்கிருப்பு ₹5,00,000-த்துடன் தொழில் தொடங்கியது.**

2 **A என்பவருக்கு சரக்கு விற்பனை செய்து நிகழ் நேர மொத்த தீர்வகம் (RTGS) மூலமாக ரொக்கம் பெற்றது ₹2,50,000**

3 **Z என்பவருக்கு கடன் விற்பனை செய்தது ₹20,000**

5 **Z என்பவர் மீது எழுதிய ₹20,000 க்கான மாற்றுச் சீட்டினை அவர் ஏற்பு செய்தார்.**

8 **Z என்பவரிடமிருந்து பெற்ற மாற்றுச்சீட்டு வங்கியில் தள்ளுபடி செய்தது ₹19,000**

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

10	**M என்பவருக்கு கடன் விற்பனை செய்தது**	**₹12,000**
12	**மாதிரி சரக்குகள் இலவசமாக கொடுத்தது**	**₹2000**
16	**அலுவலகத் தேவைக்காக சரக்குகள் எடுத்தது**	**₹5,000**
17	**M என்பவர் நொடிப்பு நிலையடைந்ததால், ஒரு ரூபாய்க்கு 80 காசுகள் வீதம் ரொக்கம் பெற்று, அவர் கணக்குத் தீர்க்கப்பட்டது.**	
20	**வங்கியில் தள்ளுபடி செய்த Z என்பவரின் மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது.**	

தீர்வு :

ஷியாம் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்	பே. ப. எண்	பற்று ₹	வரவு ₹
2017 ஆக. 1	ரொக்கக் க/கு ப சரக்கிருப்பு க/கு ப ஷியாம் முதல் க/கு (ரொக்கம் மற்றும் சரக்கிருப்புடன் தொழில் தொடங்கியது)		4,00,000 5,00,000	9,00,000
2	வங்கி க/கு ப விற்பனை க/கு (கடன் விற்பனை செய்து நிகழ்நேர மொத்த தீர்வகம் மூலம் ரொக்கம் பெற்றது)		2,50,000	2,50,000
3	Z க/கு ப விற்பனை க/கு (கடன் விற்பனை செய்தது)		20,000	20,000
5	பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு க/கு ப Z க/கு (மாற்றுச் சீட்டினை Z ஏற்பு செய்தார்)		20,000	20,000
8	வங்கி க/கு ப தள்ளுபடி க/கு ப பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு க/கு (மாற்றுச் சீட்டு வங்கியில் தள்ளுபடி செய்தது)		19,000 1,000	20,000
10	M க/கு ப விற்பனை க/கு (கடன்விற்பனை செய்தது)		12,000	12,000
12	விற்பனை மேம்பாட்டுச் செலவுகள் க/கு ப கொள்முதல் க/கு (சரக்குகள் மாதிரியாக வழங்கப்பட்டது)		2,000	2,000
16	அலுவலகச் செலவுகள் க/கு ப கொள்முதல் க/கு (அலுவலகத் தேவைக்காக சரக்குகள் எடுத்தது)		5,000	5,000
17	ரொக்க க/கு ப (12,000×0.80) வராக்கடன் க/கு ப M க/கு (M கணக்கு தீர்க்கப்பட்டது)		9,600 2,400	12,000
20	Z க/கு ப வங்கி க/கு (மாற்றுச் சீட்டை வங்கி நிராகரித்தது)		20,000	20,000

12. மேரி என்ற அரிசி வியாபாரி கடந்த ஐந்து ஆண்டுகளாக தொழில் நடத்தி வருகிறார். அவருடைய குறிப்பேட்டில் 2018 மார்ச் மாதத்திற்கான நடவடிக்கைகளை பதிவு செய்க.

[Govt. MQP; First Mid & HY. - 2018; CRT - 2022]

மார்ச்		₹
1	**சிபி என்பவரிடமிருந்து அரிசி மூட்டைகள் கடன் கொள்முதல் செய்தது**	**20,000**
2	**இணைய வங்கி மூலமாக மின்கட்டணம் செலுத்தியது**	**500**
3	**சிபியிடமிருந்து வாங்கிய சரக்கு திருப்பி அனுப்பப்பட்டது**	**5,000**
4	**சொந்தப் பயன்பாட்டிற்காக எடுத்த அரிசி மூட்டைகள் மதிப்பு**	**1,000**
5	**விளம்பரக் கட்டணம் செலுத்தியது**	**2,000**
6	**மனோ என்பவருக்கு சரக்கு கடனுக்கு விற்றது**	**20,000**
7	**மனோ என்பவரால் சரக்கு திருப்பியனுப்பப்பட்டது**	**5,000**
8	**மனோவிடமிருந்து பெற வேண்டிய தொகை மின்னணு பணப்பரிமாற்றம் மூலமாக பணம் பெறப்பட்டது**	

தீர்வு : மேரி ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்	பே. ப. எண்	பற்று ₹	வரவு ₹
2018 மார்ச் 1	கொள்முதல் க/கு ப சிபி க/கு (கடன் கொள்முதல் செய்தது)		20,000	20,000
2	மின்கட்டணம் க/கு ப வங்கி க/கு (மின்கட்டணம் செலுத்தியது)		500	500
3	சிபி க/கு ப கொள்முதல் திருப்பம் க/கு (சரக்கு திருப்பி அனுப்பியது குறித்து)		5,000	5,000

www.surabooks.com

www.surabooks.com

நாள்	விவரம்	பே. ப. எண்	பற்று ₹	வரவு ₹
4	எடுப்புகள் க/கு ப கொள்முதல் க/கு (சொந்த பயன்பாட்டிற்கு எடுத்தது)		1,000	1,000
5	விளம்பரக் கட்டணம் க/கு ப ரொக்கக் க/கு (விளம்பரக் கட்டணம் செலுத்தியது)		2,000	2,000
6	மனோ க/கு ப விற்பனை க/கு (கடன் விற்பனை)		20,000	20,000
7	விற்பனைத் திருப்பம் க/கு ப மனோ க/கு (சரக்கு திருப்பி அனுப்பியது குறித்து)		5,000	5,000
8	வங்கி க/கு ப மனோ க/கு (மின்னணு பணப்பரிமாற்றம் மூலமாக பணம் பெறப்பட்டது)		15,000	15,000

மாணவர் செயல்பாடு :

1. பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளில் விடுபட்ட தகவல்களை நிரப்புக. [HY. - 2018; May - 2022]

நாள்	விவரம்	பே. ப. எண்	பற்று ₹	வரவு ₹
	________ க/கு ப ________ க/கு (ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது ₹ 20,000)		______	______
	________ க/கு ப ________ க/கு ப நிஹா க/கு (₹ 18,800 பெற்றுக்கொண்டு நிஹாவின் ₹ 19,000ற்கான க/கு தீர்க்கப்பட்டது)		______ ______	______

தீர்வு :

நாள்	விவரம்	பே. ப. எண்	பற்று ₹	வரவு ₹
	கொள்முதல் க/கு ப ரொக்க க/கு (ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது ₹ 20,000)		20,000	20,000
	ரொக்க க/கு ப அளித்த தள்ளுபடி க/கு ப நிஹா க/கு (₹ 18,800 பெற்றுக்கொண்டு நிஹாவின் ₹ 19,000ற்கான க/கு தீர்க்கப்பட்டது)		18,800 200	19,000

2. பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளுக்கான விளக்கக் குறிப்பு தருக. [HY.-'19 & '23]

ஷியாம் என்பவரின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்	பே. ப. எண்	பற்று ₹	வரவு ₹
2018 ஏப். 1	ரொக்க க/கு ப ஷியாம் முதல் க/கு (________)		3,00,000	3,00,000
2	வங்கி க/கு ப ரொக்க க/கு (________)		2,70,000	2,70,000

தீர்வு : **ஷியாம் என்பவரின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்**

நாள்	விவரம்	பே. ப. எண்	பற்று ₹	வரவு ₹
2018 ஏப். 1	ரொக்க க/கு ப ஷியாம் முதல் க/கு (ஷியாம் ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது)		3,00,000	3,00,000
2	வங்கி க/கு ப ரொக்க க/கு (வங்கியில் ரொக்கம் செலுத்தியது)		2,70,000	2,70,000

அரசு தேர்வு வினா-விடைகள்

1 மதிப்பெண்

1. கீழ்க்கண்டவற்றுள் எது ரொக்க நடவடிக்கை?
(அ) பொருட்களை விற்றது [BEQ; Govt. MQP - 2018]
(ஆ) ராமுவிற்கு பொருட்களை விற்றது
(இ) ராமுவிற்கு பொருட்களை கடனுக்கு விற்றது
(ஈ) ராமுவிற்கு பொருட்களை கணக்கில் விற்றது
[விடை. (அ) பொருட்களை விற்றது]

2. கீழ்க்கண்டவற்றுள் எது சரியானது? [BEQ; Govt. MQP-2018]
(அ) சொத்துகள் = பொறுப்புகள் – முதல்
(ஆ) சொத்துகள் = முதல் – பொறுப்புகள்
(இ) சொத்துகள் = பொறுப்புகள் + முதல்
(ஈ) சொத்துகள் = புறப்பொறுப்புகள்
[விடை. (இ) சொத்துகள் = பொறுப்புகள் + முதல்]

3. ஒரு நிறுமம் தனது கடனீந்தோர் அனைவருக்கும் பணம் செலுத்தியது. கணக்கியல் சமன்பாட்டில் அதன் விளைவு? [BEQ; Govt. MQP-2018]
(அ) சொத்து அதிகரிக்கும் மற்றும் பொறுப்பு குறையும்
(ஆ) பொறுப்பு அதிகரிக்கும் மற்றும் சொத்து குறையும்
(இ) சொத்து குறையும் மற்றும் பொறுப்பு குறையும்
(ஈ) சொத்து குறையும் மற்றும் பொறுப்பு அதிகரிக்கும்
[விடை. (இ) சொத்து குறையும் மற்றும் பொறுப்பு குறையும்]

4. ஆள்சார், சொத்து மற்றும் பெயரளவு கணக்குகளின் சரியான பொருத்தத்தை குறிப்பிடுக. [BEQ; QY. - 2018]

(அ) சந்துரு, கூலி, கட்டடம் (ஆ) கட்டடம், சந்துரு, கூலி
(இ) சந்துரு, கட்டடம், கூலி (ஈ) மேற்கூறிய அனைத்தும்

[விடை. (இ) சந்துரு, கட்டடம், கூலி]

5. அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது ₹1,20,000/- சமன்பாட்டின் நிகழ்வை குறிப்பிடு. [BEQ; QY. - 2018]

(அ) சொத்தின் மதிப்பு உயரும் மற்றும் சொத்தின் மதிப்பு குறையும்.
(ஆ) சொத்தின் மதிப்பு உயரும் மற்றும் பொறுப்பின் மதிப்பு உயரும்.
(இ) சொத்தின் மதிப்பு உயரும் மற்றம் பொறுப்பின் மதிப்பு குறையும்.
(ஈ) எதுவும் சரியல்ல

[விடை. (அ) சொத்தின் மதிப்பு உயரும் மற்றும் சொத்தின் மதிப்பு குறையும்.]

6. ₹50 மதிப்புள்ள சரக்குகளை அறநிதிக்கு கொடுத்ததை எந்த கணக்கில் வரவு வைக்க வேண்டும். [BEQ; HY. - 2018]

(அ) அறநிதிக் கணக்கு (ஆ) விற்பனைக் கணக்கு
(இ) கொள்முதல் கணக்கு (ஈ) ரொக்கக் கணக்கு

[விடை. (இ) கொள்முதல் கணக்கு]

7. RTGS என்பது _______ குறிக்கிறது. [BEQ; QY. - 2018]

(அ) நிகழ்நேர மொத்த தீர்வகம்
(ஆ) தேசிய மின்னனு நிதிப் பரிமாற்றம்
(இ) கடன் அட்டை (ஈ) எடுப்பு அட்டை

[விடை. (அ) நிகழ்நேர மொத்த தீர்வகம்]

8. ஒரு நிறுவனத்தின் சொத்துக்களின் மதிப்பு ₹2,00,000/- மற்றும் அதன் வெளியாட்களுடனான பொறுப்புகள் ₹1,20,000/- எனில் அந்நிறுவனத்தின் முதல் _______ [BEQ; QY. - 2018]

(அ) ₹3,20,000/- (ஆ) ₹1,20,000/-
(இ) ₹2,00,000/- (ஈ) ₹80,000/-

[விடை. (ஈ) ₹80,000/-]

9. கொடுபட வேண்டிய கூலி ஒரு : [June - 2019]

(அ) பெயரளவு கணக்கு (ஆ) ஆள்சார் கணக்கு
(இ) சொத்து கணக்கு
(ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

[விடை. (ஆ) ஆள்சார் கணக்கு]

10. ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள் மதிப்பு ₹20,000 மற்றும் அதன் வெளியாட்களுடனான பொறுப்புகள் ₹12,000 எனில் அந்நிறுவனத்தின் முதல் _______ [QY. - 2019]

(அ) ₹2,000 (ஆ) ₹8,000 (இ) ₹22,000 (ஈ) ₹18,000

[விடை. (ஆ) ₹8,000]

11. கணக்கியல் சமன்பாட்டின்படி கணக்குகளை _______ பிரிவுகளாகப் பிரிக்கலாம். [QY. - 2019]

(அ) 4 (ஆ) 3 (இ) 5 (ஈ) 2

[விடை. (இ) 5]

12. பொருத்துக. [Sep. - 2020]

(1)	சொத்து	(i)	சம்பளம் கொடுத்தது
(2)	பொறுப்பு	(ii)	வாடகை பெற்றது
(3)	வருவாய்	(iii)	கடனீந்தோர்
(4)	செலவு	(iv)	நிலம், கட்டடம்

	(1)	(2)	(3)	(4)
(அ)	(iv)	(i)	(ii)	(iii)
(ஆ)	(iv)	(iii)	(ii)	(i)
(இ)	(iii)	(iv)	(i)	(ii)
(ஈ)	(ii)	(iii)	(iv)	(i)

[விடை. (ஆ) (iv) (iii) (ii) (i)]

13. காசோலை மூலம் சம்பளம் வழங்கியது ₹ 3,000 என்பதை குறிப்பேட்டுப் பதிவில் வரவு வைக்கப்பட வேண்டிய கணக்கின் பெயர் : [May- 2022]

(அ) வங்கி க/கு (ஆ) சம்பளக் க/கு
(இ) எடுப்பு க/கு (ஈ) ரொக்க க/கு

[விடை. (அ) வங்கி க/கு]

14. நடவடிக்கைகள்..................உதவியுடன் கணக்கேடுகளில் பதிவு செய்யப்படுகின்றன. [Aug. - 2022]

(அ) குறிப்பேடு (ஆ) ஆதார ஆவணங்கள்
(இ) இருப்பாய்வு (ஈ) பேரேடு

[விடை. (ஆ) ஆதார ஆவணங்கள்]

15. ரவிக்கு சம்பளம் வழங்கியது வரவு செய்யப்பட வேண்டிய கணக்கு [CRT- 2022]

(அ) சம்பள கணக்கு (ஆ) ரவி கணக்கு
(இ) ரொக்க கணக்கு (ஈ) கூலி கணக்கு

[விடை. (இ) ரொக்க கணக்கு]

16. பெயரளவு கணக்கு கையாள்வது : [CRT- 2022]

(அ) தனிப்பட்ட நபர்கள்
(ஆ) செலவுகள் மற்றும் வருமானங்கள்
(இ) புலனாகும் சொத்துகள்
(ஈ) புலனாகா சொத்துகள்

[விடை. (ஆ) செலவுகள் மற்றும் வருமானங்கள்]

17. பொருந்தாத ஒன்றைக் கண்டறியவும் : [Mar-'23]

(அ) காப்புரிமை (ஆ) நற்பெயர்
(இ) பதிப்புரிமை (ஈ) இயந்திரம்

[விடை. (இ) இயந்திரம்]

2 மதிப்பெண்கள்

1. பின்வருவனவற்றை ஆள்சார் கணக்கு, சொத்து கணக்கு மற்றும் பெயரளவு கணக்கு என்று வகைப்படுத்துக. [BEQ; First Mid - 2018; Mar-'23; July-'23]

[அ] முதல் [QY.-'23] **[ஆ] பெற்ற கழிவு**
[இ] கட்டிடம் [QY.-'23]
[ஈ] கொடுபட வேண்டிய கூலி
[உ] ரொக்கம் [QY.'23] **[ஊ] கொள்முதல்** [QY.-'23]

விடை. (அ) முதல் – ஆள்சார் கணக்கு
(ஆ) பெற்ற கழிவு – பெயரளவு கணக்கு
(இ) கட்டிடம் – சொத்துக் கணக்கு
(ஈ) கொடுபட வேண்டிய கூலி – ஆள்சார் கணக்கு
(உ) ரொக்கம் – சொத்துக் கணக்கு
(ஊ) கொள்முதல் – பெயரளவு கணக்கு

2. இடாப்பு என்றால் என்ன? [BEQ; QY. - 2018]

விடை. (i) இடாப்பு, கடன் கொள்முதல் மற்றும் கடன் விற்பனைக்குப் பயன்படுத்தப்படுகிறது. இதில், தேதி, தொகை மற்றும் கடன் கொள்முதல் அல்லது கடன் விற்பனை குறித்த சரக்குகளின் விவரம் இடம் பெற்றிருக்கும்.

(ii) பெரும்பாலும் இடாப்பினை மூன்று படிகளில் தயாரிப்பர். முதல்படியினை வாங்குபவருக்கு தருகின்றனர்.

(iii) இரண்டாவது படியினை சோதனைச்சாவடிக்கென சரக்குடன் அனுப்பி வைப்பர். மூன்றாவது படியினை விற்பவர் தம்மிடம் வைத்துக் கொள்கிறார்.

(iv) இது நடவடிக்கையினை ஏடுகளில் பதிவு செய்யும் ஆதார ஆவணமாக பயன்படுகிறது.

கணக்குகள் :

1. கீழ்க்காணும் நடவடிக்கையினைக் கொண்டு திரு. டெரியின் 2018 ஜனவரி மாத குறிப்பேட்டினை தயாரிக்கவும். [BEQ; First Mid-2018]

		₹
2018 ஜனவரி 1	**வியாபாரம் தொடங்க கொண்டு வந்த ரொக்கம்**	**1,00,000**
	சரக்கிருப்பு	**2,00,000**
	கட்டடம்	**5,00,000**

தீர்வு : **திரு. டெரி அவர்களின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்**

நாள்	விவரம்		பே. ப. எண்	பற்று ₹	வரவு ₹
2018 ஜனவரி 1	ரொக்கக் க/கு	ப		1,00,000	
	சரக்கிருப்பு க/கு	ப		2,00,000	
	கட்டடம் க/கு	ப		5,00,000	
	டெரியின் முதல் க/கு				8,00,000
	(டெரி தொழில் தொடங்கியது)				

2. குறிப்பேட்டு பதிவுகளை தருக. [BEQ; QY. - 2018]

(அ) சார்லஸ் தொழில் தொடங்கியது ₹1,00,000/-

(ஆ) ஹரியிடமிருந்து பெற வேண்டிய தொகை மின்னனு பணப்பரிமாற்றம் மூலமாக பணம் பெறப்பட்டது ₹50,000/-

தீர்வு :

விவரம்		பற்று ₹	வரவு ₹
ரொக்க க/கு	ப	1,00,000	
சார்லஸ் முதல் க/கு			1,00,000
(சார்லஸ் தொழில் தொடங்கியது)			
வங்கி க/கு	ப	50,000	
ஹரி க/கு			50,000
(ஹரியிடமிருந்து பெறவேண்டிய தொகை மின்னனு பணப்பரிமாற்றம் மூலமாக பெறப்பட்டது)			

3. விடுபட்ட பகுதிகளை நிரப்புக : [BEQ; QY-2018]

	சொத்துகள் ₹		பொறுப்புகள் ₹		முதல் ₹
(i)	30,000	=	20,000	+	?
(ii)	?	=	25,000	+	30,000

விடை.

	சொத்துகள் ₹		பொறுப்புகள் ₹		முதல் ₹
(i)	30,000	=	20,000	+	10,000
(ii)	55,000	=	25,000	+	30,000

4. கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக. [June - 2019]

(அ)	சொத்துகள்	=	முதல்	+	பொறுப்புகள்
	1,50,000	=	80,000	+	?
(ஆ)	சொத்துகள்	=	முதல்	+	பொறுப்புகள்
	?	=	2,00,000	+	50,000
(இ)	சொத்துகள்	=	முதல்	+	பொறுப்புகள்
	2,00,000	=	?	+	23,000
(ஈ)	சொத்துகள்	=	முதல்	+	பொறுப்புகள்
	20,50,000	=	15,00,000	+	?

தீர்வு :

(அ)	சொத்துகள்	=	முதல்	+	பொறுப்புகள்
	1,50,000	=	80,000	+	**70,000**
(ஆ)	சொத்துகள்	=	முதல்	+	பொறுப்புகள்
	2,50,000	=	2,00,000	+	50,000
(இ)	சொத்துகள்	=	முதல்	+	பொறுப்புகள்
	2,00,000	=	**1,77,000**	+	23,000
(ஈ)	சொத்துகள்	=	முதல்	+	பொறுப்புகள்
	20,50,000	=	15,00,000	+	**5,50,000**

5. 2018 ஜனவரி 1 இல் தொடங்கும் ஆண்டிற்கான தொடக்க இருப்பினை உரிய குறிப்பேட்டில் பதிவு செய்க. [HY. - 2019]

ரொக்கம்	₹50,000	சரக்கிருப்பு	₹25,000
பற்பல கடனாளிகள்	₹15,000	பற்பல கடனீந்தோர்	₹10,000

தீர்வு :

தொடக்க குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்		பே.ப.எ.	பற்று ₹	வரவு ₹
2018 1 ஜன	ரொக்க க/கு	ப		50,000	
	சரக்கிருப்பு க/கு	ப		25,000	
	பற்பல கடனாளிகள் க/கு	ப		5,000	
	பற்பல கடனீந்தோர் க/கு				10,000
	முதல் க/கு (இருப்புத்தொகை)				80,000
	(சொத்துகள் மற்றும் பொறுப்புகள் கொணரப்பட்டது)				

www.surabooks.com

6. குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.
(i) வங்கியிலிருந்து கடன் பெற்றது ₹10,000
(ii) கழிவு ரொக்கமாகப் பெற்றது ₹5,000
[CRT & May - 2022]

தீர்வு : குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்	பே.ப.எ	பற்று ₹	வரவு ₹
(i)	வங்கி க/கு ப வங்கிக் கடன் க/கு (வங்கியிலிருந்து கடன் பெற்றது)		10,000	10,000
(ii)	ரொக்க க/கு ப பெற்ற கழிவு க/கு (கழிவு பெற்றது)		5,000	5,000

7. பின்வரும் குறிப்பேட்டு பதிவுகளில் விடுபட்ட தகவல்களை நிரப்புக :- [Aug. - 2022]

நாள்	விவரம்	பே.ப. எண்.	பற்று ₹	வரவு ₹
2020 ஏப்ரல் 1	____________ ப ரவி முதல் க/கு ப (ரவி ரொக்கத்துடன் வியாபாரம் தொடங்கியது)		1,50,000	1,50,000
ஏப்ரல் 10	____________ ப ரொக்க க/கு (வங்கியில் பணம் செலுத்தியது)		50,000	50,000

தீர்வு :

நாள்	விவரம்	பே.ப. எண்.	பற்று ₹	வரவு ₹
2020 ஏப்ரல் 1	**ரொக்கக் க/கு** ப ரவி முதல் க/கு (ரவி ரொக்கத்துடன் வியாபாரம் தொடங்கியது)		1,50,000	1,50,000
ஏப்ரல் 10	**வங்கி க/கு** ப ரொக்க க/கு (வங்கியில் பணம் செலுத்தியது)		50,000	50,000

9. பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளுக்கான விளக்கக் குறிப்பு தருக. [Mar-'23]

நாள்	விவரம்	பே ப எ	பற்று ₹	வரவு ₹
(i)	வங்கி க/கு ப பங்காதாயம் க/கு		2,000	2,000
(ii)	எடுப்புகள் க/கு ப கொள்முதல் க/கு		12,000	12,000

தீர்வு :

நாள்	விவரம்	பே ப எ	பற்று ₹	வரவு ₹
(i)	வங்கி க/கு ப பங்காதாயம் க/கு **(பங்காதாயம் வங்கியால் நேரடியாக பெறப்பட்டது)**		2,000	2,000
(ii)	எடுப்புகள் க/கு ப கொள்முதல் க/கு **(சொந்த பயனுக்காக சரக்குகள் எடுத்தது)**		12,000	12,000

3 மதிப்பெண்கள்

கணக்குகள் :

1. கீழ்காணும் குறுங்கட்டுரையைப் படித்துப் பார்த்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும். சுந்தர் என்பவர் புத்தகங்களை வாங்கி விற்கும் ஒரு வியாபாரத்தை ₹ 2,00,000 ரொக்கத்தை தொடக்க முதலீடாக வைத்து ஆரம்பித்தார். அதிலிருந்து அவர் ₹ 80,000 மதிப்பிற்கு புத்தகங்களை வாங்கினார் மற்றும் ₹ 2,000 மதிப்புள்ள அறைகலன்களையும் வாங்கினார். அவர் ஒரு எழுத்தரை தன்னுடைய அலுவலகத்திற்காக நியமித்தார். அந்த மாத இறுதியில் அவருக்கு சம்பளமாக ₹ 6,000 கொடுத்தார். வாங்கிய புத்தகங்களிலிருந்து சிலவற்றை ₹ 90,000 மதிப்பளவிற்கு ரொக்கத்திற்கு விற்பனை செய்துள்ளார் மற்றும் மேலும் சில புத்தகங்களை ₹25,000-க்கு ரவி என்பவருக்கு விற்றார்.

வினாக்கள் : [BEQ; Govt. MQP - 2018]

(i) எவ்வளவு தொகையை முதலாக போட்டு சுந்தர் தொழில் தொடங்கினார்?
(ii) அவர் கொள்முதல் செய்த சரக்குகளின் மதிப்பு எவ்வளவு?
(iii) என்ன சொத்து அவர் வாங்கினார்?
(iv) அவருக்கு கடனாளியாக இருப்பவர் யார்? அவர் தரவேண்டிய தொகை எவ்வளவு?

விடை. (i) ₹ 2,00,000
(ii) ₹ 82,000 (iii) அறைகலன்கள், புத்தகங்கள்
(iv) கடனாளி – ரவி, தொகை = ₹ 25,000.

2. பின்வரும் இனங்களை சொத்து, ஆள்சார் மற்றும் பெயரளவுக் கணக்குகளாக வகைப்படுத்துக. [Mar-'24]
[BEQ; QY. - 2018; Sep. - 2020 & 2021; CRT & Aug. - 2022]

(i) முதல் (ii) கொள்முதல்
(iii) வணிக நற்பெயர் (iv) பதிப்புரிமை
(v) லதா (vi) ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா
(vii) மின்கட்டணம் (viii) பங்காதாயம்
(ix) கொடுபட வேண்டிய வாடகை
(x) ரமேஷ் (xi) தள்ளுபடி பெற்றது
(xii) சந்துரு
(xiii) கொடுபட வேண்டிய கூலி
(xiv) வெளி ஏற்றிச் செல் செலவு (xv) ஹரிஷ்
(xvi) முன்கூட்டியே செலுத்தியது செலவு
(xvii) விற்பனை (xviii) வட்டி பெற்றது
(xix) கட்டிடம்

விடை. (a) **ஆள்சார் கணக்குகள் :**
(i) முதல் (v) லதா
(vi) ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா

www.surabooks.com

(ix) கொடுபட வேண்டிய வாடகை (x) ரமேஷ்
(xii) சந்துரு
(xiii) கொடுபட வேண்டிய கூலி (xv) ஹரிஷ்
(xvi) முன்கூட்டியே செலுத்தியது - பிரதிநிதித்துவ ஆள்சார் செலவு

(b) **சொத்துக் கணக்குகள் :**
(xix) கட்டிடம் (ii) கொள்முதல்
(iii) வணிக நற்பெயர் (iv) பதிப்புரிமை

(c) **பெயரளவுக் கணக்குகள் :**
(vii) மின்கட்டணம் (viii) பங்காதாயம்
(xi) தள்ளுபடி பெற்றது
(xiv) வெளி ஏற்றிச் செல் செலவு
(xviii) வட்டி பெற்றது

3. பின்வரும் குறிப்பேட்டில் விடுபட்ட தகவல்களை எடுத்தெழுதுக. [BEQ; Govt. MQP - 2018]

நாள்	விவரம்	பே.ப.எ	பற்று ₹	வரவு ₹
2018 ஜனவரி 4	________________ ப பத்மினி & கோ க/கு (மாற்றுசீட்டு பெறப்பட்டது)		60,000	60,000
5	________________ ப தள்ளுபடி க/கு ப பெறுதற்குரிய மாற்றுசீட்டு க/கு (மாற்றுசீட்டு தள்ளுபடி செய்யப்பட்டது)		58,000 ______	60,000
15	________________ ப வங்கி க/கு (மாற்றுசீட்டு மறுக்கப்பட்டது)		______	60,000

தீர்வு : குறிப்பேட்டுப் பதிவு

நாள்	விவரம்	பே.ப.எ	பற்று ₹	வரவு ₹
2018 ஜனவரி 4	பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு க/கு ப பத்மினி & கோ க/கு (மாற்றுசீட்டு பெறப்பட்டது)		60,000	60,000
5	வங்கி க/கு ப தள்ளுபடி க/கு ப பெறுதற்குரிய மாற்றுசீட்டு க/கு (மாற்றுசீட்டு தள்ளுபடி செய்யப்பட்டது)		58,000 2,000	60,000
15	பத்மினி நிறுவனக் க/கு ப வங்கி க/கு (மாற்றுசீட்டு மறுக்கப்பட்டது)		60,000	60,000

4. தேவை எனக் கருதும் இடத்தில் சரியானப் பதிவைத் தருக: [BEQ; Govt. MQP-2018]

(i) **தொழில் முதல் இட்டது :**
முதல் க/கு [கணக்கு] ப
ரொக்க க/கு

(ii) **ரொக்க கொள்முதல் :**
ரொக்க க/கு ப
விற்பனை க/கு

(iii) **எழுத்தருக்கு ஊதியம் வழங்கியது :**
ஊதியம் க/கு ப
ரொக்க க/கு

(iv) **கழிவு பெற்றது :**
கழிவு க/கு ப
ரொக்க க/கு

விடை. சரியான பதிவு :
(i) ரொக்க க/கு ப
முதல் க/கு
(ii) கொள்முதல் க/கு ப
ரொக்க க/கு
(iii) சரியான பதிவு
(iv) ரொக்க க/கு ப
பெற்ற கழிவு க/கு

5. பின்வரும் நடவடிக்கைகளை செல்வி என்பவர் ஏட்டில் கணக்கியல் சமன்பாட்டின்படி பதிவு செய்க. [BEQ; First Mid-2018; HY.-'23]

		₹
(i)	ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது	1,00,000
(ii)	வங்கியில் செலுத்திய ரொக்கம்	60,000
(iii)	வங்கியிலிருந்து கடன் பெற்றது	25,000
(iv)	காசோலை செலுத்தி சரக்கு வாங்கியது	10,000
(v)	சொந்த பயன்பாட்டிற்கு ரொக்கம் எடுத்தது	5,000
(vi)	அலுவலக தேவைக்காக வங்கியில் எடுத்தது	3,000

தீர்வு : பார்க்க பாடநூல் அலகு 3 ; எடுத்துக்காட்டு 3

6. கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக. [BEQ; First Mid-2018]

	சொத்துகள்	=	முதல்	+	பொறுப்புகள்
அ]	1,00,000	=	65,000	+	?
ஆ]	?	=	40,000	+	15,000
இ]	90,000	=	?	+	22,000

விடை. (அ) சொத்துகள் = முதல் + பொறுப்புகள்
பொறுப்புகள் = சொத்துக்கள் – முதல்
= 1,00,000 – 65,000
பொறுப்புகள் = ₹ 9,35,000

(ஆ) சொத்துகள் = முதல் + பொறுப்புகள்
= 40,000 + 15,000
சொத்துகள் = ₹ 55,000

(இ) முதல் = சொத்துக்கள் – பொறுப்புகள்
= 90,000 – 22,000
முதல் = ₹ 68,000

7. ஆட்டோமொபைல் நிறுவனம் நடத்தும் இராணியின் ஏடுகளில் பின்வரும் விவரங்களை கணக்கியல் சமன்பாட்டின்படி பதிவு செய்க. [BEQ; HY. - 2018; July-'23]
(i) **ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ₹80,000**
(ii) **இரமேஷிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ₹10,000.**
(iii) **ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது ₹6,000.**
(iv) **கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் ₹8,000.**

www.surabooks.com

தீர்வு :

வ. எண்	நடவடிக்கைகள்	ரொக்கம் ₹	சரக்கிருப்பு ₹	அறைகலன் ₹	மொத்த சொத்துக்கள் ₹	=	மொத்த பொறுப்புகள் ₹	முதல் ₹	கடனீந்தோர்
(i)	ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது	+80,000						+80,000	
	இருப்புகள்	+80,000						+80,000	
	சமன்பாடு				+80,000	=	+80,000		
(ii)	கடன் கொள்முதல்		+10,000						+10,000
	இருப்புகள்	+80,000	+10,000					+80,000	+10,000
	சமன்பாடு				+90,000	=	+90,000		
(iii)	ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது	–6,000		+6,000					
	இருப்புகள்	+74,000	+10,000	+6,000				+80,000	+10,000
	சமன்பாடு				+90,000	=	+90,000		
(iv)	கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம்	–8,000							–8,000
	இருப்புகள்	+66,000	+10,000	+6,000				+80,000	+2,000
	சமன்பாடு				+82,000	=	+82,000		

8. விடுபட்ட தகவல்களை பூர்த்தி செய்க. **[June-2019]**

நாள்	விவரம்		பற்று ₹	வரவு ₹
(i)	ரொக்க க/கு ________ (வங்கியிலிருந்து ரொக்கம் எடுத்தது)	ப	1,00,000	1,00,000
(ii)	அஜய் க/கு ________ (அஜய்க்கு கடன் விற்பனை செய்தது)	ப	90,000	90,000
(iii)	________ ரொக்க க/கு (சம்பளம் கொடுத்தது)		5,000	5,000

தீர்வு :

நாள்	விவரம்		பற்று ₹	வரவு ₹
(i)	ரொக்க க/கு வங்கி க/கு (வங்கியிலிருந்து ரொக்கம் எடுத்தது)	ப	1,00,000	1,00,000
(ii)	அஜய் க/கு விற்பனை க/கு (அஜய்க்கு கடன் விற்பனை செய்தது)	ப	90,000	90,000
(iii)	சம்பளக் க/கு ரொக்க க/கு (சம்பளம் கொடுத்தது)	ப	5,000	5,000

9. கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக. **[QY-2019]**

	சொத்துகள் ₹	=	முதல் ₹	+	பொறுப்புகள் ₹
a)	2,00,000	=	1,50,000	+	?
b)	1,00,000	=	?	+	30,000
c)	?	=	1,20,000	+	80,000

தீர்வு :

	சொத்துகள்	=	முதல்	+	பொறுப்புகள்
a)	₹2,00,000	=	₹1,50,000	+	**₹50,000**
b)	₹1,00,000	=	**₹70,000**	+	₹30,000
c)	**₹2,00,000**	=	₹1,20,000	+	₹80,000

10. விடுபட்ட தகவல்களை நிரப்புக : **[QY. - 2019]**

i)	.... க/கு .... க/கு (அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது ₹4,000)	ப
ii)	.... க/கு .... க/கு (மின்கட்டணம் செலுத்தியது ₹500)	ப
iii)	.... க/கு .... க/கு (ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹15,000)	ப

தீர்வு :

i)	**அறைகலன்** க/கு ப **ரொக்கக்** க/கு (அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது ₹4,000)		4,000	4,000
ii)	**மின்கட்டணம்** க/கு ப **ரொக்கக்** க/கு (மின்கட்டணம் செலுத்தியது ₹500)		500	500
iii)	**கொள்முதல்** க/கு ப **ரொக்கக்** க/கு (ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹15,000)		15,000	15,000

11. கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக. **[HY-2019]**

	சொத்துகள்	=	முதல்	+	பொறுப்புகள்
a)	₹2,00,000	=	₹1,10,000	+	?
b)	?	=	₹1,00,000	+	₹80,000
c)	₹2,40,000	=	?	+	₹60,000

தீர்வு :

	சொத்துகள்	=	முதல்	+	பொறுப்புகள்
a)	₹2,00,000	=	₹1,10,000	+	**₹90,000**
b)	**₹1,80,000**	=	₹1,00,000	+	₹80,000
c)	₹2,40,000	=	**₹1,80,000**	+	₹60,000

12. பின்வரும் நடவடிக்கைகளை ஜவுளி வியாபாரம் செய்யும் மணி அவர்களின் குறிப்பேடுகளில் பதிவு செய்க. **[Sep. -2020]**

2018		₹
மார்ச் 3	**ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது**	**25,000**
8	**ரொக்கத்திற்கு சரக்கு விற்பனை செய்தது**	**28,000**
18	**வாடகை செலுத்தியது**	**500**

தீர்வு : **மனோகர் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்**

நாள்	விவரம்	பே. ப எண்	பற்று ₹	வரவு ₹
2018 மார்ச் 3	கொள்முதல் க/கு ப ரொக்கக் க/கு (ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது)		25,000	25,000
8	ரொக்கக் க/கு ப விற்பனை க/கு (ரொக்கத்திற்கு சரக்குவிற்பனை செய்தது)		28,000	28,000
18	வாடகை க/கு ப ரொக்கக் க/கு (வாடகை செலுத்தியது)		500	500

13. கீழ்க்காணும் நடவடிக்கைகளைப் படித்து இரட்டைப்பதிவு விதிகளின்படி எக்கணக்கு பற்று மற்றும் வரவு வைக்கப்படும் என்று கண்டறிக. **[Sep. -2021]**

(a) சுரேஷிற்கு காசோலை மூலம் செலுத்தியது ₹ 5,000
(b) சரக்கு, ரொக்கத்திற்கு வாங்கியது ₹ 2,500
(c) மின் கட்டணம் ரொக்கமாக செலுத்தியது ₹ 1,500

விடை. (a) பற்று – சுரேஷ் கணக்கு
வரவு – வங்கி கணக்கு
(b) பற்று – சரக்கு கணக்கு
வரவு – ரொக்கக் கணக்கு
(c) பற்று – மின்கட்டணம் கணக்கு
வரவு – ரொக்கக் கணக்கு

14. தினேஷ் என்னும் வாடிக்கையாளர் நொடிப்பு நிலை அடைந்ததால், அவர் செலுத்த வேண்டிய ₹10,000 அவருடைய சொத்துகளை விற்று ரூபாய்க்கு 40 பைசா வீதம் கணக்குத் தீர்க்கப்பட்டது. வாராக் கடன் தொகையைக் கணக்கிடுக. **[CRT - 2022]**

விடை. பார்க்க பாடநூல் அலகு 3, உதாரணம் 13

15. கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக. **[QY.-'23]**

	சொத்துகள்	=	முதல்	+	பொறுப்புகள்
[அ]	3,00,000	=	90,000	+	?
[ஆ]	7,00,000	=	?	+	60,000
[இ]	?	=	5,60,000	+	70,000

தீர்வு :

	சொத்துகள் (₹)	=	முதல் (₹)	+	பொறுப்புகள் (₹)
(அ)	3,00,000	=	90,000	+	**2,10,000**
(ஆ)	7,00,000	=	**6,40,000**	+	60,000
(இ)	**6,30,000**	=	5,60,000	+	70,000

5 மதிப்பெண்கள்

1. குறிப்பேட்டுப் பதிவுகளை எவ்வாறு வகைப்படுத்துவாய்? விளக்குக **[Sep. - 2021]**

விடை. குறிப்பேட்டுப் பதிவுகளை பின்வருமாறு வகைப்படுத்துவர் :

(i) தனிப்பதிவு (ii) கூட்டுப்பதிவு
(iii) தொடக்கப்பதிவு (iv) இறுதிப்பதிவு
(v) திருத்தப்பதிவு (vi) சரிக்கட்டுப்பதிவு
(vii) மாற்றுப்பதிவு

(i) **தனிப்பதிவு :** இரண்டு கணக்குகள் மட்டும் ஒரு குறிப்பேட்டில் பதிவானால், அப்பதிவு தனிப்பதிவு எனப்படும். அதில் ஒரு கணக்கு பற்று வைக்கப்படும் மற்றொரு கணக்கு வரவு வைக்கப்படும்.

(ii) **கூட்டுப்பதிவு :** இப்பதிவில் ஒன்றிற்கும் மேற்பட்ட கணக்குகள் தொடர்புற்றிருக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட கணக்குகள் பற்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கணக்குகள் வரவு அல்லது இரண்டும் வைக்கப்படும்.

(iii) **தொடக்கப்பதிவு :** கடந்த ஆண்டின் இறுதியில் உள்ள சொத்துகளின் மற்றும் பொறுப்புகளின் இறுதி இருப்பினை நடப்பாண்டின் தொடக்க இருப்பாக கொண்டு வருவதற்கு செய்யும் பதிவு தொடக்கப்பதிவாகும்.

(iv) **இறுதிப்பதிவு :** கணக்காண்டின் இறுதியில் பெயரளவு கணக்குகள் முடிக்கப்பெற்று, வியாபார அல்லது இலாப நட்டகணக்கிற்கு மாற்றப்பட வேண்டும். அனைத்து நேரடிச்செலவுகள் மற்றும் நேரடிவருமானங்கள் வியாபாரக்கணக்கிலும், மறைமுகச்செலவுகள் மற்றும் மறைமுக வருமானங்களை இலாபநட்ட கணக்கிலும் மாற்றுவதற்கு இறுதிப்பதிவுகள் என்று பெயர்.

(v) **திருத்தப்பதிவு :** கணக்கியலில் ஏற்பட்ட பிழைகளைத் திருத்தம் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் பதிவுகள் திருத்தப்பதிவுகளாகும்.

(vi) **சரிக்கட்டுப்பதிவு :** கணக்கேடுகளில் பதிவு செய்யப்படாத நடவடிக்கைகள் அல்லது கணக்காண்டின் கணக்குகளை முடித்தபின் சரிகட்டப்பட வேண்டிய விவரங்களை கணக்கில் கொண்டுவர மேற்கொள்ளும் பதிவுகள் சரிகட்டுப்பதிவுகள் எனப்படும்.

(vii) **மாற்றுப்பதிவு :**
ஒரு கணக்கிலிருந்து மற்றொரு கணக்கிற்கு தொகையை மாற்றுவதற்கு செய்யும் பதிவு மாற்றுப்பதிவாகும்.

கணக்குகள் :

1. கீழ்க்கண்ட விவரங்களில் கொடுக்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பிலிருந்து குறிப்பேட்டுப் பதிவில் விடுபட்ட தொகையினையும் அதன் கணக்குகளையும் கண்டுபிடித்து, முழுமையான குறிப்பேட்டில் எழுதவும். [BEQ; QY. - 2018]

நாள்	விவரம்	பே. ப. எ.	பற்று ₹	வரவு ₹
2017 மார்ச் 1	-------------- -------------- (தொழில் முதல் போட்டது)		25,000	-------
2017 மார்ச் 3	-------------- -------------- (சரக்கு வாங்கியது)		-------	50,000
2017 மார்ச் 7	-------------- -------------- (ஏற்றிச்செல் செலவு செய்தது)		-------	1,500
2017 மார்ச் 15	-------------- -------------- (ராமுக்கு சரக்கு விற்றது)		40,000	-------
2017 மார்ச் 20	-------------- -------------- (கணிப்பொறி வாங்கியது)		-------	30,000

தீர்வு :

நாள்	விவரம்	பே. ப. எ.	பற்று ₹	வரவு ₹
2017 மார்ச் 1	ரொக்க க/கு ப முதல் க/கு (தொழில் முதல் போட்டது)		25,000	25,000
2017 மார்ச் 3	கொள்முதல் க/கு ரொக்க க/கு (சரக்கு வாங்கியது)		50,000	50,000
2017 மார்ச் 7	ஏற்றிசெல் செலவு க/கு ரொக்க க/கு (ஏற்றிச்செல் செலவு செய்தது)		1,500	1,500
2017 மார்ச் 15	ராமு க/கு விற்பனை க/கு (ராமுக்கு சரக்கு விற்றது)		40,000	40,000
2017 மார்ச் 20	கணிப்பொறி க/கு ரொக்க க/கு (கணிப்பொறி வாங்கியது)		30,000	30,000

2. பின்வரும் நடவடிக்கைகளை நூல்கள் விற்பனைச் செய்யும் சுந்தரின் குறிப்பேடுகளில் பதிவு செய்க. [QY-2018]

2017 டிசம்பர்		₹
1	தொழில் தொடங்க முதலிட்டது	2,00,000
2	X நிறுவனத்திடமிருந்து கடனுக்கு நூல்கள் வாங்கியது	80,000
4	வங்கியில் கணக்கு ஆரம்பித்தது	50,000
5	நரேஷ் என்பவருக்கு சரக்குகள் விற்ற தொகை	5,000
	அவர் அத்தொகையினை இணையவங்கி மூலம் செலுத்தினார்.	
6	தேவிக்கு சரக்கு விற்ற தொகை ₹7,000 அவர் அத்தொகையினை கடன் அட்டையின் மூலம் செலுத்தினார்.	
7	அஷிஷ் என்பவருக்கு நூல்கள் கடனுக்கு விற்பனை செய்தது	700
8	அலுவலகத் தேவைக்காக தானியங்கி பணம் இயந்திரம் மூலம் பணம் எடுத்தது	1,000
9	அறைகலன் ஒன்றினை பற்று அட்டையை பயன்படுத்தி வாங்கியது	2,000
10	சம்பளம் வழங்கியது	6,000
11	Y என்பவரிடமிருந்து வாங்கிய அறைகலன் மதிப்பு ₹25,000ல் முன்பணம் செலுத்தியது ₹5,000	

தீர்வு :

சுந்தரின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்	பே. ப. எண்	பற்று ₹	வரவு ₹
2017 டிசம்பர் 1	ரொக்கக் க/கு ப சுந்தர் முதல் க/கு (ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது)		2,00,000	2,00,000
2	கொள்முதல் க/கு ப X நிறுவனம் க/கு (கடன் கொள்முதல்)		80,000	80,000
4	வங்கி க/கு ப ரொக்கக் க/கு (வங்கியில் கணக்கு ஆரம்பித்தது)		50,000	50,000
5	வங்கி க/கு ப விற்பனை க/கு (இணைய வங்கி மூலம் விற்பனை செய்யப்பட்டது)		5,000	5,000
6	வங்கி க/கு ப விற்பனை க/கு (கடன் அட்டை மூலம் விற்பனை செய்யப்பட்டது)		7,000	7,000

நாள்	விவரம்	பே. ப. எண்	பற்று ₹	வரவு ₹
7	அஷிஷ் க/கு ப விற்பனை க/கு (கடனுக்கு விற்பனை செய்யப்பட்டது)		700	700
8	ரொக்கக் க/கு ப வங்கி க/கு (பணம் இயந்திரம் மூலம் அலுவலகத் தேவைக்காக எடுக்கப்பட்டது)		1,000	1,000
9	அறைகலன் க/கு ப வங்கி க/கு (அறைகலன் பற்று அட்டையை பயன்படுத்தி வாங்கியது)		2,000	2,000
10	சம்பளம் க/கு ப ரொக்கக் க/கு (சம்பளம் வழங்கியது)		6,000	6,000
11	அறைகலன் க/கு ப ரொக்கக் க/கு Y க/கு (அறைகலன் வாங்க முன்பணம் செலுத்தியது)		25,000	5,000 20,000

3. ஜெயசீலி என்னும் தனிவணிகர் ஒரு பலசரக்கு கடையினை நடத்தி வருகிறார். 2018, ஜனவரியில் அக்கடையின் நடவடிக்கைகள் பின்வருமாறு இருந்தன அவைகளைக் குறிப்பேட்டில் பதிவு செய்க. [BEQ; HY.-'18; CRT-2022]

ஜனவரி 2018

1	**ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ₹80,000.**
2	**வங்கியில் செலுத்திய ரொக்கம் ₹40,000**
3	**ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது ₹5,000**
4	**லிப்டன் நிறுவனத்திடமிருந்து சரக்குகளை கடனுக்கு கொள்முதல் செய்தது ₹10,000**
5	**ஜாய் என்பவரிடம் ரொக்கத்திற்கு சரக்கு விற்றது ₹11,000**

தீர்வு : ஜெயசீலியின் ஏடுகளில் குறிப்பேட்டு பதிவுகள்

நாள்	விவரம்	பே. ப. எ.	பற்று ₹	வரவு ₹
1	ரொக்கக் க/கு ப ஜெயசீலி முதல் க/கு (ஜெயசீலி ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது)		80,000	80,000
2	வங்கி க/கு ப ரொக்கக் க/கு (வங்கியில் ரொக்கம் செலுத்தியது)		40,000	40,000
3	கொள்முதல் க/கு ப ரொக்கக் க/கு (ரொக்கக் கொள்முதல் செய்தது)		5,000	5,000
4	கொள்முதல் க/கு ப லிப்டன் நிறுவனக் க/கு (கடனுக்கு கொள்முதல் செய்தது)		10,000	10,000
5	ரொக்கக் க/கு ப விற்பனை க/கு (ரொக்கத்திற்கு விற்பனை செய்தது)		11,000	11,000

4. பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு கணக்கியல் சமன்பாட்டினைத் தயார் செய்க. [Mar-2019]

		₹
(i)	இராஜா ரொக்கத்துடன் தொழில் தொடங்கினார்	40,000
(ii)	வங்கியில் வைப்புத் தொகையுடன் கணக்குத் தொடங்கியது	30,000
(iii)	ஹரி என்பவரிடம் கடனுக்கு சரக்கு வாங்கியது	12,000
(iv)	முருகன் என்பவருக்கு ₹5,500 மதிப்புள்ள சரக்கு விற்கப்பட்டு ரொக்கம் பெற்றது	6,500
(v)	இணைய வங்கி மூலமாக மின்கட்டணம் செலுத்தியது	500

தீர்வு :

கணக்கியல் சமன்பாடு

	விவரம்	ரொக்கம் +	வங்கி +	சரக்கு	= முதல்	பொறுப்பு
(i)	தொழில் தொடங்கியது	40,000			40,000	
(ii)	வங்கி கடன் தொகை	–30,000 10,000	30,000 +		0 = + = 40,000	0 0
(iii)	கடன் கொள்முதல்	+0	+0	12,000	+0	12,000
		10,000	30,000	12,000	= 40,000	12,000
(iv)	விற்பனை	+6,500 16,500	0+ 30,000	-5,500 6,500	+1,000 =41,000	0+ 12,000
(v)	மின் கட்டணம்	0+ 16,500	-500 +29,500	+0 +6,500	=-500 =40,500	+0 12,000
	மொத்தம்			52,500	= 52,500	

www.surabooks.com

5. விளையாட்டுப் பொருட்கள் விற்பனை செய்யும் பிருந்தாவின் ஏடுகளில் பின்வரும் நடவடிக்கைகளுக்கு குறிப்பேட்டுப் பதிவு தருக. [Mar. -2019]

2018		₹
ஏப்ரல் 1	தொழில் தொடங்குவதற்கு இட்ட தொகை	50,000
5	சுபாஷிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது	20,000
7	இராமுவிற்கு கடனுக்கு சரக்கு விற்றது	15,000
12	சுபாஷிற்கு ரொக்கம் செலுத்தியது ₹19,500 தள்ளுபடி பெற்றது ₹500	
15	கூலி செலுத்தியது ₹500 மின் கட்டணம் செலுத்தியது ₹3,000 வியாபாரச் செலவுகள் ₹1,000	

தீர்வு :

பிருந்தாவின் குறிப்பேட்டுப் பதிவுகள்:

நாள்	விவரம்	பே. ப. எ.	பற்று ₹	வரவு ₹
2018 ஏப்ரல் 1	ரொக்க க/கு ப பிருந்தாவின் முதல் க/கு (ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது)		50,000	50,000
5	கொள்முதல் க/கு ப சுபாஷ் க/கு (கடனுக்கு சரக்கு வாங்கியது)		20,000	20,000
7	இராமு க/கு ப விற்பனை க/கு (கடனுக்கு விற்றது)		15,000	15,000
12	சுபாஷ் க/கு ப ரொக்க க/கு பெற்ற தள்ளுபடி க/கு (சுபாஷிற்கு ரொக்கம் செலுத்தியது)		20,000	19,500 500
15	கூலி க/கு ப மின் கட்டண க/கு ப வியாபார செலவு க/கு ப ரொக்க க/கு (ரொக்கச் செலவுகள் செய்தது)		500 3,000 1,000	4,500

6. திருமதி. சரஸ்வதி விளையாட்டு பொருட்கள் விற்பனை செய்யும் நிறுவனம் நடத்தி வருகிறார். அவருடைய 2017 மார்ச் மாத நடவடிக்கைகள் பின்வருமாறு இருந்தன. அவைகளைக் கொண்டு குறிப்பேட்டுப் பதிவுகள் தருக. [June - 2019]

மார்ச்		₹
1	ரொக்கத்துடன் வியாபாரம் தொடங்கியது	5,00,000
2	வங்கியில் ரொக்கம் செலுத்தியது	2,50,000
3	இரவியிடமிருந்து சரக்குகள் கொள்முதல் செய்தது	1,00,000
4	குமாருக்கு விற்பனை செய்யப்பட்டது அத்தொகையை அவர் பணம் வைப்பு இயந்திரம் மூலம் செலுத்தினார்	20,000
5	விவேக்கிற்கு கடன் விற்பனை செய்தது	50,000
6	ரொக்க கொள்முதல்	30,000
7	பங்காதாயம் நேரடியாக வங்கியால் பெறப்பட்டது	3,000
8	சம்பளம் மின்னனு பரிவர்த்தனை மூலம் வழங்கப்பட்டது	6,000
9	தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் மூலம் ரொக்கம் எடுத்தது	9,000
10	அறக்கட்டளைக்கு கிரிக்கெட் பந்துகள் வழங்கியது	2,500

தீர்வு :

திருமதி. சரஸ்வதி ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்	பே. ப. எண்	பற்று ₹	வரவு ₹
2017 மார்ச் 1	ரொக்கக் க/கு ப திருமதி. சரஸ்வதி முதல் க/கு (ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது)		5,00,000	5,00,000
2	வங்கி க/கு ப ரொக்கக் க/கு (வங்கியில் ரொக்கம் செலுத்தியது)		2,50,000	2,50,000
3	கொள்முதல் க/கு ப இரவி க/கு (கடன் விற்பனை செய்தது)		1,00,000	1,00,000
4	வங்கி க/கு ப விற்பனை க/கு (சரக்கு விற்பனை செய்து பணம் வைப்பு இயந்திரம் மூலம் ரொக்கம் பெற்றது)		20,000	20,000
5	விவேக் க/கு ப விற்பனை க/கு (கடன் விற்பனை செய்தது)		50,000	50,000
6	கொள்முதல் க/கு ப ரொக்கக் க/கு (ரொக்கக் கொள்முதல் குறித்து)		30,000	30,000
7	வங்கி க/கு ப பங்காதாயம் க/கு (பங்காதாயம் வங்கியால் நேரடியாக பெறப்பட்டது)		3,000	3,000
8	சம்பளம் க/கு ப வங்கி க/கு (மின்னனு பரிமாற்றம் மூலம் சம்பளம் வழங்கியது)		6,000	6,000

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000